No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

மலர் 10 | 1933 ௵ செப்டம்பர் ௴ | இதழ் 10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1933
MADRAS

"ஜகன்மோகினி"யின்

பதின்மூன்றுவதாண்டுக் கொண்டாட்டம்

பல பரிசுகளும் ஒரு வருஷ

சஞ்சிகையும் இனாம்

பிரவேசக் கட்டணமில்லை.

இதனுள்ளிருக்கும்

விண்ணப்பத்தைப் படியுங்கள்.

JL
2211, N24JM
N33 10:10
21004

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

...ரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

குறிப்பு: ... ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

தனிப் பிரதி விலை: உள் நாடு, அணா 2 : வெளி நாடு, அணா 3

பதினொன்றுவதாண்டுக் கொண்டாட்டம்
தமிழபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

ஸர்வ வியாபியாகிய ஸர்வேச்வரனின் கருணைகடாக்ஷத்தினாலும், தமிழ்த் தாயின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள அன்பர்களின் பேராதரவினாலும் நமது "மோகினி" ச்செல்விக்கு இந்த நவம்பர் மாதத்துடன் பத்து ஆண்டுகள் பூர்த்தியடைந்து, டிசம்பர் மாதத்தில் பதினொன்றுவதாண்டு பிறக்கப்போகின்றது. இத்தனை ஆண்டுகளில் நேயர்கள் ஆதரித்ததை விட இந்த பத்தாவதாண்டில் சந்தா நேயர்கள் இன்னும் பெருகி நம் மனத்தை களிக்கச்செய்து பெரும் உற்சாகத்தை ஊட்டியது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதற்காக என்மனப்பூர்வமான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இதேபோன்று பதினொன்றுவதாண்டிலும் இதை விட அதிகமான நேயர்கள் சேர்ந்து இன்னும் அபிவிருத்தியடையச் செய்வார்களென்று நம்பி, எதிர்பார்க்கிறேன்.

நாம் ஆரம்பித்த காதலின் கனி என்ற நாவல் இவ்விதழுடன் முடிவடைந்து விட்டது. அடுத்த 11—12 இரண்டு இதழ்களில் புதிய கதையை முடித்து விட்டு, 11-வது ஆண்டில் வேறு புதிய துப்பறியும் நாவலை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன். 11-வது ஆண்டின் சந்தாத் தொகையை நேயர்கள் தயவு கூர்ந்து முன்பாகவே அனுப்புவதுடன், மோகினிச் செல்வியைத் தங்கள் அன்பர்களுக்கும் சிபார்சு செய்து ஆதரிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
தங்களிடம் நன்றியுள்ள
வை. மு. கோதைநாயகி.

பதினொன்றுவது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

புது வருஷ சந்தாவை டிசம்பர் மீ 20 தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 25		3-வது பரிசு ரூ. 10	
2-வது பரிசு ,, 15		3-பரிசுகள் ,, 5	

நமக்கு ஏஜன்டுகள் இல்லாத இடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவோம். அவர்களும், ஏஜன்டுகளும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அடுத்த இதழ் வெளியாகிற வரையில்தான்

இந்த ஆண்டுக்குச் சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ள முடியுமாதலால் நேயர்கள் உடனே சந்தாவை முன் பணமாக அனுப்பக் கோருகிறோம்.

அடுத்த ஆண்டு சந்தாவையும் சேர்த்தனுப்பினால் தபாற் செலவு மிகுதியாகுமென்பதைக் கவனியுங்கள்.

16-வது அதிகாரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1933
MADRAS

கள்ளனின் மனைவி என்றும் கைம்பெண்ணே

“தம்பீ! சோமு! என்னடா செய்வது? காரியம் மிகவும் மிஞ்சி விட்டதாகத் தெரிகிறதே! உன்னாலேயே எனக்குப் பேராபத்து நேரும்போலிருக்கிறதே! நான் என்ன செய்வேன்! உண்மையில் திலகவதி விஷயத்தில் நீ சம்பந்தப் படவில்லையா! உன் வார்த்தையை எவ்விதம் நம்புவது? நீதான் அவளை இருட்டறையிலிருந்து தப்ப வைத்ததாகக் கூறுகிறார்களே! வேண்டாம்; விளையாட வேண்டாம்; உண்மையைக் கூறி விடு.” என்று அங்கச்சியம்மாள் சோமுவைக் கேட்டாள்.

சோமு:—அக்கா! நீ என்ன இவ்விதம் என்மீதே சந்தேகிக்கின்றாயே? நான் உண்மையாக, உன்மீதே ஆணையாக இதில் சம்பந்தப் படவில்லை. அந்த சுகுமாரப் பயல்மீதுதான் எனக்குப் பூர்ண சந்தேகம். அதற்குத் தக்க சாக்ஷிகள்கூட கிடைத்திருப்பதாக இன்ஸ்பெக்டர் இடியப்பம் சொன்னார். என்னை நீ எவ்வளவு அலக்ஷியம் செய்து வெறுத்து வந்திருந்தபோதிலும் கூடப் பிறந்த சகோதரி என்கிற பாசத்தினால் உன்னழைப்பிற்கு நான் மீண்டும் வந்தேன். ஏதோ உன்னோடு உழைத்து என் காலத்தைக் கடத்தி விடலாம் என்று தீர்மானித்திருக்கையில் என்மீது நீ வீண் சந்தேகங் கொள்ளலாமா! அதோ குடுகுடுப்பாண்டியின் ஆள் வந்திருக்கிறான் பார்” என்றான்.

இருவரும் வேகமாக அவனிடம் ஓடினார்கள். “என்ன! என்ன! என்ன செய்தி?” என்றாள் அங்கச்சியம்மாள். வந்த ஆள் ஓர் கடிதத்தை நீட்டி “இதற்குப் பதில் வாங்கி வரச் சொன்னார்கள்.” என்றான். அங்கச்சியம்மாள் வெகு பரபரப்புடன் அக்கடிதத்தை வாங்கிப் படிக்கலானாள். அது பின் வருமாறு:—

"அம்மா!

21004 6

அவசரம்! அவசரம்! உங்களுடைய புதையல் எடுக்கும் விஷயத்தில் நீங்கள் மிகவும் உஷாராயும், அதி ஜாக்ரதையாயும் இருக்கவேண்டும். ஏனெனில் எப்போதும் புதையல் எடுக்கும் செய்தி வெளியில் தெரிந்தால் போலீஸார் கைது செய்வதோடு அந்த திரவ்யத்தையும் அவர்களே சர்க்காருக்குச் சேர்த்து விடுவார்கள். இந்த விஷயம் தமக்குத் தெரிந்திருக்கலாம். நீங்கள் புதையல் எடுக்கும் விஷயம் எப்படியோ வெளியில் தெரிந்துவிட்டதாக நான் நினைக்கிறேன். அவ்விஷயத்தில் போலீஸாரும் கவனிப்பதாக அறிகிறேன். ஆதலால்தான் இதை எழுதுகிறேன். ஏதோ ஒரு கொள்ளைக் கூட்டத்தை அந்தத் துப்பறியும் பயல் நாயுடுவும், அவன் வளர்ப்புப் புதல்வி அம்புஜமும் பிடித்துக் கைதியாக்கி விட்டதாகத் தெரிகிறது. போலீஸாரின் மூளைக்கு எல்லாம் விபரீதமாகத்தான் தோன்றும். அந்த முகமறியாத கொள்ளைக் கூட்டத்தினருடன் என்னையும் தங்களையும் சம்பந்தப்படுத்தி யிருப்பதாகச் செய்தி தெரிகிறது. தாயே! அம்மணீ! நான் அத்தகையோனல்ல. போலீஸார் இவ் விஷயத்தில் இன்னும் கவனிப்பதற்குள்ளாக இன்று இரவே சரியாக 12 மணிக்கு உங்களுக்குப் புதையலை எடுத்துக் கொடுத்து விடுகிறோம். தேவதையும் உத்திரவு கொடுத்து விட்டது. திலகவதியும் கிடைத்து விட்டாள். அவளையே இன்றிரவு பலி கொடுத்து நம் காரியத்தை நடத்தி விடலாம்.

அம்மணீ! கோபிக்கலாகாது; உங்கள் தம்பியே திலகவதி விஷயத்தில் நம்மை மோசம் செய்து, அவளை மறைத்து விட்டதாக நன்றாகத் தெரிந்துவிட்டது. ஆதலால் அவரைப் புதையல் எடுக்கும் இடத்திற்கும் அழைத்து வர வேண்டாம்: அவர் வந்தால் சகல காரியமும் குட்டிச்சுவராகி விடும். ஜாக்கிரதை: தாங்கள் மட்டும் சற்றும் பயமின்றி நான் சொல்லிய படி பணத்தை எடுத்துக்கொண்டு தயாராக வாருங்கள். தங்க பாளத்தையும் எடுத்துக்கொண்டு வரவும். அதையும் சேர்த்துப்

பூஜையில் வைக்க வேண்டும். தாங்கள் பயப்படாமல் தைரிய மாய் வரவும். மற்றபடி நேரில் பேசிக்கொள்ளலாம்.

இங்ஙனம்......சொ..லி.

அதைப் படித்த அங்கச்சியம்மாளுக்கு சோமுவின் மீது அடங்காத கோபம் வந்துவிட்டது. அவனிடம் கடிதத்திலுள்ள விஷயத்தைக் கூறச் சம்மதியாது மறைத்தாள். வித்யாசத்தையும் காட்டிக்கொள்ளாமல் அதற்குப் பதில் எழுதச் சென்றுவிட்டாள்.

"ஐயா! தங்கள் கடிதம் கிடைத்தது. சோமு இத்தகைய மோசம் செய்வானென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அது எனக்கு மிக்க விசனமாக விருக்கிறது. நான் தைரியமா கப் பணம், தங்க பாளம் இரண்டையும் எடுத்துக்கொண்டு வரு கிறேன். திலகவதி கிடைத்துவிட்டதைப் பற்றிப் பரம சந் தோஷம். அவளைப் பற்றித் தான் போலீஸார் அலைகிறார்கள். அவள் விஷயம் மட்டும் ஜாக்ரதை; ஜாக்ரதை! மற்றபடி நேரில் பேசலாம்.

இங்ஙனம்,
அங்கச்சியம்மாள்."

என்று எழுதி உரையிலிட்டுக் கொடுத்தனுப்பிவிட்டாள்.

சோமு கடிதத்தைப் பற்றிக் கேட்டதற்குச் சரியாக விடை கொடுக்காது ஏதோ சாக்குச் சொல்லி விட்டாள். சோமு மட்டும் இந்த கடிதங்களைக் கண்ட பிறகு அங்கச்சியம்மாளுக்குண்டான மாறுதலைக் கண்டுகொண்டான். உடனே அவனுக்கு அவனை யறியாது ஒரு வித பயம் தோன்றிவிட்டது. அதன் காரணத்தை அவனே அறிய முடியவில்லை. உடனே அங்கச்சியம்மாளிடம் சென்று" அக்கா! நீ ஏதோ முக்கியமான விஷயத்தை என்னிடம் ஒளிப்பதாகத் தெரிகிறது; நீ என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

அங்க:—சோமு! எனக்கு இப்போது அவசரமான ஜோலிக ளிருப்பதால் நான் செல்லவேண்டும். விசேஷம் ஒன்றுமில்லை. இன் னும் மூன்று தினத்திற்குள் புதையல் எடுப்பதாகத் தெரிவித்திருக்

கிறான்—என்று கூறிக்கொண்டே போய்விட்டாள். அதற்குமேல் சோமு அங்கு நிற்கவில்லை; வெளியில் சென்றான்.

கணபதிக்கு உள்ளூர மனத்தில் ஒருவிதமான கிலியும் ஏக்கமும் அவனை யறியாது கப்பிக்கொண்டுவிட்டது. திலகவதியின் விஷயத்தில் அவன் உண்மையிலேயே பரிபூர்ணமான நல்லெண்ணமும் ப்ரீதியும் வைத்திருந்தான்; எனினும் எக்கச் சக்கமாகக் காரியங்கள் வந்து முடிந்துவிட்டதால் அவள்மீது சந்தேகங் கொள்ளவும் ஏது உண்டாயிற்று. உடனே அவளைக் காணாது போய்விட்டதால் அதே சந்தர்ப்பத்தைக் கொண்டு சுகுமாரனையும் கைது செய்ததும், கோமளவல்லியம்மாள் புலம்பித் தவித்ததும் கண்ட கணபதிக்கு மூளையே கலங்கிவிட்டது போலாய்விட்டது. என்ன செய்வான் பாவம்! பழங்காலக் கதைகளெல்லாம் நினைவிற்கு வந்தன. இப்படித் திரும்பினால் நெருப்பு; அப்படித் திரும்பினால் தண்ணீர் என்பது போல, அவன் பாடு ஆய்விட்டதால் ப்ரமை கொண்டவன்போல தத்தளிக்கலானான். அந் நிலைமையில் மனமுறிந்து ஏதேதோ எண்ணித் தனக்குள் தான் புலம்பித் தவிக்கின்றான். இந்தக் குற்றமும் கோளாறும் யாரால் விளைந்தது என்பதை அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. மனைவியை அதிகமாகக் கேட்டாலோ அதோடு மானம் போய் விடுகிறது; அவள் படுத்தும் பாடு கூறத்திறமன்று. நாக்கைப் பிடுங்கிக்கொண்டு ப்ராணனை விட்டுவிடலாம்போலாய்விடுகிறது. சோமுவின் விஷயத்திலும் இப்படியே; என்ன செய்வான் பாவம்!

இத்தகைய கொடிய அரக்கிக்கு ஒப்பான மனைவியைக் கட்டிக்கொண்டு வாழும் தலை விதியை எண்ணி ஏங்கினான். அனாதையிலும் அனாதையான திலகவதியின் கதியை நினைத்து உள்ளம் உருகினான். தான் சற்று ஆத்திரப்படாமலிருந்தால் இக்கதி நேர்ந்திருக்காதல்லவா!-ஐயோ! பேதைப் பெண் என்ன நிலைமையில் இருக்கிறாளோ! சுகுமாரன் மீது நான் சிறிதும் சந்தேகங் கொள்ளாதிருக்கையில் அந்தப் பாதகியின் போதனையும் அதற்குத் தகுந்தாற்போல் கிடைத்த கடிதமும் சத்ருவாயமைந்தன. நான் இந்த குழப்பமான நிலைமையில் என்ன செய்வேன்........திலகம் சாமான்ய குழந்தையா! ஐயோ!...பாவியின் மூளை அக்காலையில் மங்கி

விட்டதே! கபடமற்ற காரிகையல்லவா! என் கொடிய சொல்லைத் தாங்காது அவள் எங்கேனும் ப்ராணத் தியாகந்தான் செய்துகொண்டிருப்பாள். வீணாக கோமளவல்லியம்மாளின் வயிறெரிய சுகுமாரனைச் சிறையிலிட்டிருப்பது தருமமா!

ஐயோ! காதல்...காதல்...காதலின் மகிமையை நான் என் சொந்த அனுபவத்தில் கண்டறிந்து தவித்திருந்தும் திலகவதியின் விஷயத்தில், சுகுமாரன் விஷயத்தில் கண்ணிருந்தும் குருடனாகி ஆய் விட்டேனே; என் வேதவல்லியை இன்று நினைத்தாலும் என் தேகம் மயிர்க்கூச்செறிகிறதே! அந்த விஷயங்களை எல்லாம் அக்காலையிலிருந்த ஆவேசத்தில் மறந்து கேவலம் முழு மூடமாகி விட்டேனே! ஈசா! பேதைமை என்பது மாதற்கணிகலம்; பெண் புத்தி பின் புத்தி என்று பெண்களுக்குக் கூறுவார்கள். என் விஷயத்தில் அது விரோதமாகி எனக்கே அத்தன்மை வந்துவிட்டதே!

என் மனோ சாந்தி எல்லாம் இப்பாதகியைக் கைக்கொண்ட நாள் முதலே அற்றுவிட்டது. ஏதோ என் கடனைத் துலைத்து வந்த எனக்கு இத்தகைய கலக்கமும் வர வேண்டுமா! சீச்சீ! இத்தகைய பெண்டைத் தேடி மணக்கும் ஆண்பிள்ளையின் களிப்பும், தூக்கு மாத்தில் தொங்கலாடும் கொலைகாரனின் நிலைமையும் ஒன்றேதான். இவ்வித வாழ்க்கை வாழ்வதைவிட உயிர் துறப்பது மேலன்றோ!... ...உம்...இனி கடந்ததைக் குறித்துச் சிந்தித்து உபயோகமென்ன? என் கண்மணி திலகவதியின் மகிமையை அறியாத மகா பாவியாகி அவளை வேண்டுமென்று நானே கொன்றுவிட்டேனே! என் வேதவல்லியின் அடையாளப் பரிசு என்பதையும் ஆத்திரத்தில் மறந்துவிட்டேனே! என் செய்வேன்? இனி அம்மாதரசியை எங்கு காண்பது? ஹா!...திலகவதி திலகவதி!'' என்று தனக்குள் புலம்பித் துடித்துப் பெருமூச்சு விட்டுக் கண்ணீர் பெருக்கியவாறு படுக்கையிலேயே விழுந்துவிட்டான். அவன் என்ன செய்வதென்று தோன்றாத பித்தன்போலானான்.

நாயுடு மட்டும் இன்ஷ்யூர் ஏஜெண்டுபோல் அடிக்கடி வருவதை அவன் இன்னாரென்று அறியமாட்டானாகையினால் அவரிடம்

வெறுப்பாயும், மனம் தவித்தும் பதில் கூறி யனுப்பிவிடுவான். நாயுடு அக்காலையில் கணபதியின் நிலைமையை நன்கு கவனித்துக் கொண்டு போவதுடன், முக்கியமான ரகஸ்யத்தை ஒரு நொடியில் கண்டு பிடித்து வெகு சந்தோஷமடைந்து சென்றார்.

அங்கச்சியம்மாளுக்கு அன்றைய தினமே அதிர்ஷ்ட லக்ஷ்மி வீட்டிற்கு வரும் தினமாகையினால் சந்தோஷம் தலைக்கு மிஞ்சி விட்டது. சமையல் செய்யவும், சாப்பாடு போடவும், குழந்தைகளைக் கவனிக்கவும் அடியோடு மறந்துவிட்டாள். எத்தகையோருக்கும் அதிக சந்தோஷமோ, துக்கமோ வந்தால் அந்த உணர்ச்சியின் பயனாக உலகையே மறந்து விடுவது சகஜமல்லவா? அதிலும் அங்கச்சியம்மாள் புதையல் கண்டெடுக்கும் அபாரமான சந்தோஷத்தில் தன் வீட்டையே மறந்துவிட்டாள் என்பது வியப்பே இல்லை.

வீட்டிலிருந்த முக்யமான வெள்ளிப் பாத்திரங்களை எல்லாம் விற்றுப் பணமாக்கி வைத்துக்கொண்டாள். அதற்குப் பதிலாக ஜெர்மன் ஸில்வரில் வீட்டிற்குப் பாத்திரங்கள் வாங்கிவிட்டாள். கணபதி தன்னுடைய பெருங் குழப்பத்தில் இதைக் கவனிக்கவே இல்லை. அங்கச்சியம்மாள் எப்போது இரவு வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்குச் சரியான துணை யில்லையே என்கிற கவலை மட்டும் சிறிது பாதிக்கின்றது; எனினும் அவளுடைய அபார சந்தோஷத்தின் முன்பு இது எங்கேயோ மறைந்துவிடுகின்றது. இத்தகைய நிலைமையில் பிரயாணத்திற்கு ஆயத்தமாகி விட்டாள்.

இரவும் வந்தது. மணியைக் கணக்கு எண்ணிக்கொண்டே இருந்தாள். டாங் டாங் டாங் என்று 11-மணி யடித்தது. அங்கச்சியம்மாளின் இருதயம் எத்தகைய கொடிய விஷமோ அறியோம். குடுகுடுப்பைக்காரனின் மோட்டார் தோட்டத்தில் வந்து நின்றவுடன் ஒரு விதமான ஹாரன் செய்தது. அங்கச்சியம்மாள் பணப் பையுடன் சன்னதமாகிச் சற்றும் அச்சமில்லாமல் தோட்டத்திற்கு வந்து, ஓசை செய்யாமல் வண்டியில் ஏறினாள். வண்டியும் நகர்ந்து விட்டது.

இருள் கப்பிக் கொண்டிருக்கிறது. அந்த அடர்ந்த கானகம் போன்ற விடத்தில் இந்த ஒரு மோட்டாரைத் தவிர வேறு சந்தடியே இல்லை. பயமென்பதே சற்றும் இல்லாமல் அங்கச்சியம்மாள் புதையலாகிய சாகரத்தில் மூழ்கி அதோடு விளையாடிக்கொண்டே இவ்வுலகையே மறந்துவிட்டாள். குறித்த நேரத்தில் புதையல் எடுக்கும் இடத்திற்கு வண்டி வந்து நின்றது. அங்கு சிறு விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

பழையபடியே பூதங்களின் ஆரவாரம் அண்டத்தை யளாவிக் கொண்டிருந்தது. மத்தியில் ஒரு சிறு பந்தல் போட்டிருந்தது. அதைச் சுற்றித் தோரணங்களும், வாழைமரங்களும் கட்டி இருந்தன. அந்த பந்தலின் மத்தியில் கோலம் போட்டு அதன் மத்தியில் சில பூசணிக்காய்கள், கள்ளுக் குடங்கள், பட்டாணி, அவல் பொரி, கடலை, பழங்கள், சூடம், தலை வாழையிலை முதலிய படையல் சின்னங்கள் காணப்பட்டன. இரண்டு ஆடுகள், கோழிகள், ஒரு பக்கத்தில் கட்டப்பட்டிருந்தன. பம்பை உடுக்கை தாரை தம்பட்டம் முதலிய வாத்ய கோஷங்கள் முழங்கின. அதன் மத்தியில் மந்திரவாதி ஈர ஆடையோடு விபூதியை தேக முற்றும் பூசிக் கொண்டு வேப்பிலையைத் தாங்கி நின்றான்.

அங்கச்சியம்மாளை இறக்கி ஓர் இடத்தில் அமரச் செய்தார்கள். அவள் அங்குள்ள சன்னதங்களைக் கண்டு ப்ரமித்து உட்கார்ந்திருந்தாள். அடுத்த நிமிடம் கால் கைகளைக் கட்டியபடியே திலகவதியை அங்கு கொணர்ந்து நிற்க வைத்தார்கள். தள்ளாடித் துவண்டு, தத்தளித்துக் கட்டுண்ட நிலைமையில் வந்து கண்ணீர் பெருக நிற்கும் திலகவதியைக் கண்ட எத்தகைய கல்லும் கரைந்துருகும். ஆயினும் அங்கச்சியம்மாளின் சந்தோஷக் குவியலின் மத்தியில் இந்த உணர்ச்சி பெரிதாகத் தெரியவில்லை. எனினும் அந்நிலைமையில் அவளைப் பார்த்தவுடன் திடுக்கிட்டெழுந்தாள். தந்தப் பதுமை போல நிற்கும் திலகவதியின் பரிதாபகரமான கோர காட்சியைக் கண்டு பிரமித்தாள். ஏதோ ஒரு வித ஷாக்கு—மின்சார சக்தி—தாக்கியது போலாய் விட்டாள்.


R.V.K.

கட்டுண்டு வந்த திலகவதி தன் கனவிலும் நினையாதபடி அங்கச்சியம்மாளைக் கண்ட உடனே தடை கட்டிய நாகம்போல நின்றாள். அடுத்த விநாடி "ஹா! மாமீ! மாமீ! தாங்களா என்னை இக் கதிக்குக் கொண்டு வந்தீர்கள்? என்னை இவ்விதம் பலி கொடுப் பதற்காகவா வளர்த்தீர்கள்? ஹா! நான் இனி மூடமன்று. என் பிறப்பு, வளர்ப்பு அறியாத சிறுமியல்ல. என் பூர்வோத்திரங்களை நன்கறிந்து விட்டேன். இப்படியும் பலி கொடுக்க மனந் துணியுமா! ஐயோ! இவர்கள் எல்லாம் பக்காத் திருடர்களாயிற்றே! முழு மோசக் காரர்களாயிற்றே! கொள்ளைக் கூட்டக் கொள்ளிக் கட்டைக ளாயிற்றே! இவர்களைத் தாங்கள் நம்பி இவ்விதம் மோசம் போவீர் களா! ஐயோ! என்னை பலி கொடுப்பதோடு தாங்களும் பலியாகப் போகின்றீர்களே! கேடு வரும் பின்னே! மதி கெட்டு வரும் முன்னே! என்பது உண்மையாகி விட்டதே! மாமீ! மாமீ!" என்று திலகவதி தாங்க வியலாத துக்கத்துடன் சத்தமிட்டாள்.

இம் மொழிகளைக் கேட்ட அங்கச்சியம்மாளின் இதயம் துடித்தது. அவள் நிலை கலங்கியது. அதே சமயம் ஓர் முரடன் ஓடி வந்து, திலகவதியை ஓர் மரத்தோடு பிணைத்துக் கட்டிவிட்டு அவள் வாயில் ஓர் துணிப் பந்தை அடைத்து விட்டான்.

அங்கச்சியம்மாளுக்கு இதுகாறும் மலைபோல் சந்தோஷங் குவிந்து கிடந்ததற்கு நேர்மாறாக மிக்க விசனமும், சொல்ல வறியாத வேதனையும், பீதியும் குடிகொண்டு அவள் மனத்தில் வதைக்க வாரம்பித்தன. எந்த திக்கு நோக்கினும் திக்கு திக்கு என்று பயம் நடுக்கத் தொடங்கியது. அதோடு பிரமை கொண்டவள்போல விழித்துக்கொண்டே சுற்றும் பார்க்கிறாள். ஒன்றுமே தோன்றாது குழம்பிப் போய்விட்டாள்.

குடுகுடுப்பாண்டி அவள் நிலைமையை அறிந்து அவளுக்குத் தேறுதல் கூறிப் பின் அவள் கொணர்ந்த பணத்தை வாங்கிப் பந்தலில் வைத்துப் பூஜைக்குத் தொடங்கினான். பூஜை கொஞ்சங் கொஞ்ச மாக நடக்கத் தொடங்கி மந்திரங்கள் சொல்லச் சொல்லப் புதை யல் கங்காளங்கள், தவலைகள் முதலியன கண கணவென்று ஓசை

யுண்டாகி பூமியிலிருந்து மெல்ல வெளிப்படத் தலைப்பட்டன. அதைக் கண்டதும் அங்கச்சியம்மாள் பழய மாதிரியான சந்தோஷ நிலையை அடைந்து அதையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். திலகவதியின் கதியைக் கூறவேண்டுமா?

*   *   *   *   *

பாழும் வீட்டு ஜன்னலில் நின்று தவித்த திலகவதி இங்கு எவ்விதம் வந்து அகப்பட்டுக்கொண்டாள் என்று அறிய வாசகர்களின் மனம் தவிக்குமாதலால் அந்த வரலாற்றைக் கூறி அவர்கள் மனத்தைச் சாந்தி செய்துவிடுவோம்.

பாழ் வீட்டிலிருந்து அவள் கூவியதைக் கேட்ட வண்ணாரச் சிறுவர்களும், சிறுமிகளும், பெரியோர்களும் உண்மையிலேயே பயந்து இடிந்துவிட்டார்கள். ஏனெனில் சாதாரணமாக பேய், பிசாசு, பூதம், முனி, காட்டேரி முதலியவைகளைப் பற்றிப் பயப்பட்டு பூஜை முதலியன செய்வது கீழ்தர ஜாதியார்களே யாகையினால் அவர்களுக்கு அது விஷயத்தில் அசாத்யமான திகில் பிடித்து விட்டதால் அவரவர்களின் துணிகளை மூட்டை கட்டிக்கொண்டு குழந்தைகளை இழுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

அவர்கள் ஓடும்போது "ஐயையோ! எத்தனையோ நாளைய பாழும் வீட்டில் இருக்கும் பூதம் இன்றுவெளிப்பட்டுவிட்டதே! நாம் உடனே மந்திரவாதியை அழைத்துக்கொண்டு இங்கு வந்து அந்த பூதத்தை ஓட்டவேண்டும். இல்லையேல் நம்மை எல்லாம் கொன்றுவிடும்; இனி இங்கு வருவதற்கே முடியாது." என்று கூவினார்கள்.

இதைக் கேட்ட திலகவதி "ஐயோ! நான் பூதமில்லை; பைசாசமில்லை. உங்களைப் போன்ற ஓர் பெண் பாவிதான்" என்று எத்தனை கூவியும் பயனற்று விட்டது. அதே ஏக்கத்தினால் அவள் மனமுடைந்து தத்தளித்துச் சோர்ந்து விழுந்து விட்டாள்.

வெளியிலிருந்து ஓடிய வண்ணான்கள் தங்கள் வீட்டில் மூட்டையை வைப்பதற்குள்ளேயே பாழும் வீட்டில் பிசாசு என்கிற மூட்டையை அவிழ்த்து விட்டார்கள். இச் செய்தி ஊர் முற்றும்

பரவி விட்டது. அவர்களில் ஒருவன் ஓடி ஒரு மந்திரவாதியை அழைத்துக்கொண்டு வந்தான். எல்லோருமாக மீண்டும் கூட்டங் கூடி அப்பாழ் வீட்டருகில் வந்தார்கள். அவ்வீட்டுக்கு இது காறும் பூட்டு கிடையாது; இன்று புதிதாகப் பூட்டி இருப்பதன் காரணம் என்னவோ இருக்கவேண்டுமென்று மந்திரவாதி மட்டும் கவனித்தான்.

அந்த மந்திரவாதி யாராகவிருக்கும் என்கிற சந்தேகம் வேண்டாம்: அவனே அங்கச்சியம்மாளுக்கு வேண்டிய குடுகுடுப்பாண்டியின் சிஷ்யன் இந்தப் பூட்டு விஷயமான சந்தேகம் ஜனங்களுக்குத் தெரியாதபடி மறைத்து விட்டு "நேயர்களே! உள்ளிருந்து வரும் வாடையைப்பார்த்தால் மோகினிதேவதையின்சேஷ்டையைப்போல் தோன்றுகிறது. அது உள்ளிருந்து வெளிப்படும்போது நீங்கள் எல்லோரும் இங்கேயே எதிர்ப்பட்டால் ஆண்களையாயினும் பெண்களையாயினும் சடக்கென்று பிடித்துக்கொள்ளும். அதன் பிறகு ஓட்டுவது சாத்யமில்லை, நீங்களெல்லோரும் போய்விடுங்கள். நான் வேலையை முடித்துக்கொண்டு வருகிறேன்.'' என்றான்.

இதுவும் உண்மைதான் என்று நம்பி எல்லா ஜனங்களும் ஓடிவிட்டார்கள். அந்த மனிதனுக்கு முன்னெச்சரிக்கையாக இவ்விதம் தோன்றுவதற்குக் காரணம் என்னவெனில் திலகவதியை முதன் முதலில் மெஸ்மரிஸம் செய்து கொண்டு போன இடத்திலிருந்து அவளைக் காணாது போய் விட்ட விவரம் ஒரு வேலைக்காரனுக்கு மட்டும் தெரியுமாதலால் மற்றையோருக்குத் தெரியாது. இது பெரிய கலக்கமாகிவிட்டது. அங்கச்சியம்மாளுக்கு முதல் பயம் பிடித்துக் கொண்டது. அவள் எப்படியேனும் தப்பித் தவறி வெளியில் உயிரோடு வந்துவிடுவாளாயின் தன் தலை போய்விடும் என்கிற பெரும் பயம் பிடித்துக்கொண்டது. அதனால் அந்த குடுகுடுப்பைக்காரர்களிடமே எப்படியாவது அவளைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால் அவர்களுக்குத் தான் பெருந் தொகை கொடுப்பதாய் வாக்குக் கொடுத்திருந்தாள். அதோடு அவள் அகப்பட்டுவிட்டால் குடுகுடுப்பை வகையராக்களுக்கும் பெரிய அபாயமாதலால் அவ் விஷ

யத்தில் அவர்கள் சிரத்தைகொண்டு உள்ளுக்குள்ளேயே தேடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த விடத்திலும் மேல்படி ஆசாமி அதே சந்தேகத்துடன் வந்தான். கூட்டங்கள் விலகியதும் தன்னிடமுள்ள மாறு சாவிக ளால் அந்தப் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். ஆகா! அந்த கூடத்தின் மத்தியில் கோடி சூரியப் பிரகாசம்போல ஜ்வலிக் கும் திலகவதி ஸ்மரணையற்றுப் படுத்திருப்பதைப் பார்த்துப் பரமாச்சரியமடைந்து "அப்பாடா! கடவுள் நம்மைக் காப்பாற்றுவ தற்கே இவளைக் காட்டிக் கொடுத்தார்" என்று உள்ளம் பூரித்தான். தன்னை அவள் சந்தேகிக்காதவாறு நடிக்கத் தொடங்கினான்.

"அம்மா, திலகவதி! எயுந்திரு! எயுந்திரு! நீ மொதல்லே கூவச் சேயே நானு ஏதோ பயந்துட்டேன். அப்பறம் தான் நீ யாருன்னு தெரிஞ்சிது. என்னைத் தெரியுதா! அங்கச்சியம்மா வூட்லே இருக்கும் கொயந்தை இல்லே நீ: ஒங்க வூட்டுக்கு துணி வெளுக்குற வண்ணா னில்லே நானு என்னெப்பாரு; ஆனா அயுக்கு எடுக்கா கொணாந்து கொடுக்கா நானு அதிகமா வரதில்லே; என் பொஞ்சாதிதான் வருவா; அதனாலே ஒனக்குத் தெரியாமெ இருக்கலாம், கணக்கு பாக்கவும் பணம் வாங்கவும் நான்தான் வந்திருக்கேன். அப்பொல்லாம் ஒன்னெ நானு பாத்திக்கிறேன்; நீ இந்த பாயு வூட்டே எப்படி வந்தே! எயுந்திரு" என்றான்.

இக் கபட நாடகத்தை யறியாத திலகவதி ஒருகால் வண்ணா னைத் தானிருக்குமோ என்று நம்பிவிட்டாள். "ஐயா! உண்மையில் நீங்கள் வண்ணான்தானா? எனக்கு நம்பிக்கை த்ரோகம் செய்யமாட் டீர்களே? சத்தியமாகச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினாள்.

மந்திர:—அம்மா! நான் உண்மையில் வண்ணான்; நீ வா; ஒன்னெ ஒங்க வூட்டுலே உட்டுடரேன்.—என்றான்.

திலகவதிக்கு இவ்விடத்தை விட்டுத் தப்பவிட்டால் வேறு எவ்விதமாயினும் தான் பிழைத்துக் கொள்ளலாம் என்ற தீர்மான மிருப்பதால் அவனை நம்பினாள். "ஐயா! நான் எப்படி இங்கு வந்தேன்

என்கிற வரலாற்றைப் பிறகு சொல்கிறேன். நீங்கள் என்னை முத லில் நான் சொல்லும் இடத்தில் கொண்டு சேர்த்து விடும்." என்று கூறிக் கோமளவல்லியம்மாளின் விலாசத்தைத் தெரிவித்தாள்.

மாய ஜால மந்திரக்காரன் அதற்கு இசைந்ததுபோல நடித்து அவளை யழைத்துக்கொண்டு சிறிது தூரம் நடந்து அங்கு ஓர் வண்டி யமர்த்தி, அதில் ஏற்றி நேராகத் தங்கள் மந்திரக் கொட்டடிக்குக் கொண்டு சென்றுவிட்டான். அப்போதே திலக வதிக்குப் பெருஞ் சந்தேகம் உண்டாகிவிட்டது. எனினும் அதை யடக்கிக்கொண்டே சென்று பார்க்கையில் தான் மீண்டும் மோச வலையிலேயே மாட்டிக் கொண்டதை யறிந்தாள். என் செய்வாள் பாபம்? தத்தளிக்கின்றாள். விவரம் இன்னதென்று புரியாமல் தவிக் கின்றாள்.

* * * *

முன்னதிகாரத்தின் இறுதியில் கூறியபடி, அம்புஜமும், நாயு டுவும் அந்தச் சித்திரத்தை வைத்துக்கொண்டு மண்டையை உடைத் துக்கொண்டு அவற்றின் மறை யுரைகளை விரிவிக்கலானார்கள்.

அம்புஜம்:—அப்பா! இதை எந்த விதமாகத் திருப்பிப் பார்ப் பது? எனக்குப் புரியவில்லையே! தலை கீழாகக் கூட்டிப் பார்த்தேன். மாற்றெழுத்தாகப் பார்த்தேன்! பக்கத்து, நெடுச் சாரியாகக் கூட் டிப் பார்த்தேன்! ஒன்றிலும் புரியவில்லையே! இவ் விஷயத்தில் நான் தோல்விதான். நீங்கள் பிரித்திருப்பின் சீக்கிரம் சொல்லுங்கள்; வேலை யாகட்டும். முதல் படம் சோப்பு என்று இருக்கிறது. சந்தன சோப்பு என்றும் போட்டிருக்கிறது. இவ்விரண்டில் எதை எடுத் துக் கொள்வது. முதல் படமே கலவரமாக விருக்கிறதே!

நாயுடு:—அம்மா! நானும் திண்டாடுகிறேன். எனினும் முதல் நான்கு படங்களைச் சேர்த்து வாசித்ததில் பொருள் கிடைத்தவிட் டது. ஆயினும் சிலவற்றிற்கு இரண்டு பொருள் தருகின்றன. நான்கா வது ருத்திராக்ஷமா! மாலையா! 5-வது டங்கர்வா! தபேலாவா! ஆறா வது மான் இதற்கு என்ன பொருள்?

அம்புஜம்:—ஆ! அப்பா! தாங்கள் வழி காட்டிய பிறகு தெரிகிறது. இதோ பாருங்கள். இந்த நான்கு படங்களையும் இப்படிச் சேருங்கள்; சரியாய் வரும். சோப்பு. முருங்கக்காய், திராக்ஷை, ருத்திராக்ஷம், டமாரம். இதுவரையில் சேர்த்தால், சோமு திருடன் என்று புலனாகிறது. மான். என்பதில் மாவை விலக்கின் சேர்த்தால் திருடன் என்பது வியக்தமாகவில்லையா? அப்பா! இனிமேல் அப்படியே பாருங்கள். அடுத்தது அணில், வண்ணான், நோன்பு, வீடு. இதில் வீ என்பதை விலக்கின், அவனோடு னே என்பது இலக்கணப் பிழை என்பதாகிறது. பிறகு ஊசி குத்தல்—இஞ்ஜெக்ஷன், ருத்திரமூர்த்தி, தெப்பம், வண்டு, மோட்டார். இவற்றில் தெப்பத்தில் 'தெ' 'ம்' என்பதையும் மோட்டார் என்பதில் "மோட்டா" என்பதையும் விலக்கின், அவனோடு இருப்பவர் என்பதாகிறது. அதன் பிறகு, கண், தேள், தயிர்க்காரி, சுப்பிரமணியர், ஓட்டல் இவற்றில் தேள் என்பதில் 'தே' என்பதையும், சுப்பிரமணியரில், சு. ரமணியர் என்பதையும் எடுத்துவிடின் அவனோடு இருப்பவர்கள் தப்பி...ஓ என்பதாகிறது. பிறகு தர்மாமிட்டர் அதாவது டிக்கிரி, யந்திரம், கைம்பெண், திமிங்கிலம் கல்யாணம் தப்பி ஓடிய கைதிக என்பதாகிறது. அரிவாள் என்பதில் அரிவா என்பதை நீக்கின் கைதிகள் என்பதாகிறது. மேளக்காரர்கள், குடம் மாமரம் ரதம் ஒரு மனிதன் மார்பில் கையை வைத்திருக்கிறான். அது நான் என்பதாகும் நா என்பதை விலக்கி இவைகளைக் கூட்டுங்கள். மேளம் வாசிப்பதன் அர்த்தம் சுபம். ஆதலால் சுகுமாரன் என்பதாகிறது: பிறகு சுவாமிக்கு நிவேதனம், ரம்பம், பர்வதம், ராக்ஷதன் திருமகள் இதைக் கூட்டுங்கள் சுகுமாரன் நிரபராதி. ஆகா அப்பா! என்ன புதுமை! ஒருத்தி திரும்பிப் பார்க்கிறாள். லங்கை கப்பல் இருவர் வம்பு பேசுகிறார்கள். திருடன் இது திலகவதி என்றாகிறது.

ஆ! அப்பா! எல்லாம் விளங்கிவிட்டன! சேர்த்துப் பாருங்கள்! சோமு திருடன்; அவனோடு இருப்பவர்கள் தப்பி ஓடிய கைதிகள்; சுகுமாரன் நிரபராதி; திலகவதி. என்பது விவரமாக விளங்கிவிட்டது. அப்பா! திலகவதியின் மதி நுட்பத்தைப் பார்த்தீர்களா! தான் எழுதுவது ஏதோ விளையாட்டாக விருக்கட்டும் என்று பிறர்

அறியும்படியும், ஆழ்ந்த கருத்துக்களை யடக்கியும் சாமர்த்தியமாக எழுதியிருப்பது மிகவும் மெச்சத்தக்க விஷயம்! அப்பா! நாம் இன்றே சோமுவைப் பிடித்து விடுவோம். அவனோடிருப்பவர்களுக்கும் மரியாதை செய்துவிடலாம்! அப்பா! நான் சோமுவின்மீது சந்தேகமே கொள்ளவில்லை. இந்த அங்கச்சியேதான் ஏதோ செய்துவிட்டாள் என்று நினைத்துவிட்டேன். உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்றாள்.

நாயுடுவிற்கு அம்புஜத்தின் புத்தி கூர்மையைக் கண்டு சந்தோஷம் பொங்கிவிட்டது. "அம்மா! குழந்தாய்! என் மனங் களிக்குங் களிப்பைக் கூறத் திறமே இல்லை. கூடிய சீக்கிரத்தில் நீயே நானாகி விடுவாய்! நான் கவலையற்று இருப்பேன். நான் சந்தேகித்தது இருவர்மீதுந்தான். இக்காரியம் ஒருவரால் மட்டும் ஆய்விட்டதாக நினைக்காதே! இந்த சோமுவையும், அங்கச்சியம்மாளையும் நான் கவனித்து வருவதிலிருந்து தெரிந்துகொண்டது என்னவெனில் அவ்விருவரும் ஒருவரையறியாது ஒருவர் ஏதோ சூது செய்திருக்கிறார்கள். இதில் சந்தேகமே இல்லை. ஏனெனில் ஒரு தினம் அங்கச்சியும் சோமுவும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் நான் மறைந்து கவனித்தேன். அதில் சில ரகஸ்யங்கள் வெளியாயின.

மேலும் நாம் இப்போது கைதியாக்கியுள்ளவர்களில் ஒருவனை நான் கைவசமாக்கிக்கொண்டிருக்கிறேன். அவன் மூலமாக அறிந்த விஷயம் யாதெனில் அங்கச்சியம்மாளே முதல் முதல் திலகவதியை மந்திரத்தினல் மயக்கி வீட்டிலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படி மந்திரவாதிக்குத் தெரிவித்து, அதற்காக ஏதோ தொகை கொடுத்ததாயும் அவ்வாறே அவன் அதைப் பெற்றுக்கொண்டு அவளை அழைத்து வந்துவிட்டதாயும் தெரிந்தது.

அந்த மந்திரவாதியையே எவனோ ஏமாற்றி அங்கிருந்து அவளை அடித்துக் கொண்டுபோய்விட்டதாக ஒருவன் தெரிவித்தான். அப்படிச் செய்தவன் அங்கிருப்பவர்களிலேயே ஒருவன் அப்பெண்ணின் மீது ஆசைகொண்டு செய்ததாக ஒருவன் கூறினன். இன்னொருவன் "சோமுவாக விருக்கலாம் இவன்தான் சோமு என்று திட்டமாகக்

கூற முடியாது; எவனோ ஒருவன் குட்டையாயிருக்கிறான். ஆளைப் பார்த்தால் சொல்வேன்! பலான இடத்தில் அடைத்திருப்பதாக நான் ஊகித்தறிந்தேன்.'' என்று இடத்தைச் சுட்டி அடையாளங் கூறினான். அதைக்கொண்டுதான் நான் சென்று பார்த்தேன்! என் மனத்திற்குள் மாத்திரம் அங்குள்ள மந்திரவாதிகளில் ஒருவனே இவ்விதம் செய்திருப்பான் என்று எண்ணினேன். அதோடு ஆராய்ச்சி செய்ததில்தான் இச்சித்திரம் கிடைத்தது. இதிலிருந்து இப்போது விளங்கிவிட்டது. இனி நாம் உடனே சோமுவை தாக்ஷணியமின்றிக் கைதியாக்கிவிட்டு அவனைக்கொண்டே திலகவதியைத் தேடவேண்டும். ஆ! ஒன்று மறந்தேனே! திலகவதியின் கள்ளக் கையொப்பமிட்ட கடிதத்தின் மர்மம் கண்டுபிடித்துவிட்டேன்; அது பார்க்கப்போனால் மிகவும் சுலபத்தில் முடிந்துவிட்டது. முதலில் மலைபோலத் தோன்றியது.'' என்று அவர் கூறி முடிப்பதற்குள் அம்புஜம் "ஆ! கண்டுபிடித்துவிட்டீர்களா, எப்படி? எப்படி? யார் குற்றவாளி?'' என்று பரபரப்பாகக் கேட்டாள்.

நாயுடு:—குற்றவாளி யாரா? நீ யார் என்று நினைக்கிறாய்?

அம்புஜம்:—நான் அங்கச்சியும் சோமுவுந்தான் என்று நினைக்கிறேன்.

நாயுடு:—(நகைத்துக்கொண்டே) அம்மா! எல்லோரும் அப்படித்தான் நினைப்பார்கள்; ஆனால் போலீஸார் என்னவோ சுகுமாரனைக் கொண்டு திலகவதி போர்ஜரி செய்ததாகவும், திலகவதியே செய்ததாயும் நிச்சயித்துவிட்டார்கள். அந்த மாதிரி நான் நினைக்கவில்லை. நீ நினைத்ததுபோலவே நானும் ஏமாந்துவிட்டேன்; பிறகு ஆராய்ச்சி செய்ததில் நானே ப்ரமித்தேன். குற்றவாளி கணபதியேதான்.

அம்புஜம்:—என்ன! என்ன! குற்றவாளி கணபதியா! அவரேயா இப்படிச் செய்துவிட்டு, அந்தப் பெண்ணின்மீது பழி சாட்டி வழக்கும் தொடங்கிவிட்டார்! ஐயையோ! இவ்விதமும் செய்வார்களா! அவரே மோசம் செய்ததாக வன்றோ, இனி வழக்கு மாறிவிடும்?

சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

ஒவ்வொரு ஆங்கில மாதமும் கடைசித் தேதியன்று நாங்கள் எல்லோருக்கும் சஞ்சிகையை அனுப்புகிறோம். அது யாருக்காவது சேராவிடில் வழியில் தவறி விட்டதென்று தெரிந்து, நமக்கு 15-தேதிக்குள் தெரிவித்தால் வேறொரு சஞ்சிகையை இனாமாக அனுப்புவோம். அதன் பிறகு எழுதுபவர்கள் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் சஞ்சிகை அனுப்பப்படும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்கு புது விலாசத்தைத் தெரிவிக்காமலும், தபாலாபீஸுடன் புது விலாசத்திற்குச் சஞ்சிகையை அனுப்ப ஏற்பாடு செய்யாமலுமிருந்து, சஞ்சிகை தவறி விடில் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

கடிதம் எழுதும்போது அவசியம் தங்களது சந்தா நம்பரை எழுத வேண்டும்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

					"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2-பாகங்கள்)	2	8	0	...	2	0	0
பத்மசுந்தரன்	2	8	0	...	2	0	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	0	...	2	0	0
சாருலோசனா (2-பாகங்கள்)	2	8	0	...	2	0	0
நவநீதகிருஷ்ணன்	2	0	0	...	1	12	0
ருக்மிணீகாந்தன்	2	0	0	...	1	12	0
சாமளநாதன்	2	0	0	...	1	12	0
சண்பகவிஜயம்	1	12	0	...	1	8	0
கௌரீமுகுந்தன்	1	12	0	...	1	8	0
ஸாரமதி	1	12	0	...	1	8	0
சோதனையின் கொடுமை	1	8	0	...	1	4	0
பரிமளகேசவன்	1	4	0	...	1	0	0
உத்தமசீலன்	1	4	0	...	1	0	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	...	0	14	0
கதம்பமாலை	1	0	0	...	0	14	0
கோபாலரத்னம்	0	14	0	...	0	12	0
நளினசேகரன்	0	8	0	...	0	6	0
வீரவஸந்தா	0	8	0	...	0	6	0
மூன்று வைரங்கள்	0	8	0	...	0	6	0

ரூ. **20-8-0** முன்பண மனுப்புவோருக்கு மேற்கண்ட 19 நாவல்களையும் தபாற்செலவின்றி அனுப்பவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

நீங்கள் பல வருஷங்களாக எதிர்பார்த்திருந்த
புத்தகத்தின்

இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

"பிரஜாநுகூலன்", "அமிர்த குணபோதினி" இவற்றின் பத்திராசிரியரும், பிரஸித்த கதாசிரியருமாகிய

ஸ்ரீமான் எஸ் ஜீ. இராமாநுஜலு நாயுடு

இயற்றிய

ஆநந்த கதா கல்பகம்

(முதல் வால்யம்)

இதில் 22 நாவல்களும், 27 கதைகளும், 890 அநுபவ ரகஸியங்களும், வேறு பலவும் அடங்கியுள்ளன.

912 பக்கங்களுள்ள மகா பெரிய நாவல்

மிகவும் குறைந்த விலை ரூ. 3 தான்: தபாற் செலவு அணு 8.

பாலிகா கல்பகம்

சிறுமிகளுக் கவசியமான நூல் விலை அணு ஆறு.

"ஜகன்மோகினி" ஆபீஸ்., திருவல்லிக்கேணி.

மகான் அரவிந்தர்

மனைவியாருக்கு எழுதிய கடிதம்

புதுச்சேரியில் தவராஜ யோகியாக விளங்கும் மகான் அரவிந்த கோஷ் சுமார் இருபதாண்டுகளுக்கு முன் தமது மனைவியாருக்கு எழுதிய அரிய கடிதம் இந்நூலில் அடங்கியிருக்கிறது. இதில் அரவிந்தர் பெருமை, அவரது அற்புத தேசபக்தி, சிறந்த தெய்வ பக்தி, மாதர் கடமை யாதியன விளங்கும். சிறந்த காகிதத்தில் பெரிய கொட்டை யெழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டணைத் தபால் தலை அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பாரதியார் நூல்கள்

கதைக் கொத்து

இதில் பாரதியார் தன் சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள், இன்னும் நமது மடமை, மூட பக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவைபோன்ற ஸமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை எடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 0 8 0

பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான நூன்முகமும் அடங்கியது. அணா 0 8 0

வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேதரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கி யுள்ளன. ரூபா 2 0 0

கவிதைகள்

தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திச்சூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன. ரூபா 2 8 0

சங்கு நூல்கள்

மகாத்மா காந்தி எழுதிய

	ரூ.	அ
சத்திய சோதனை I	1	8
ஷை II	2	0
இல்லறமும் பிரம்மசரியமும்	0	6
அனாசக்தியோகம்	0	4
ஆரோக்கிய வழி	0	4
மகா தியாகம்	0	4
நீதி தருமம்	0	2
கீதாபோதனை	0	2
உத்தம வாழ்க்கை	0	2
ஹிந்து தாமம்	0	2

ரோமேன் ரோலண்டு எழுதிய

மகாத்மா காந்தி (புதிய பதிப்பு	0	4

வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

	ரூ.	அ
இல்லற மகா ரகசியம்	0	4

பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான

இந்தியாவின் கடன் பொறுப்பு	0	4

க. சந்தானம் எழுதிய

சத்திய சமாஜம்	0	4

வ. வே. ஸு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின் காதல் கதைகள்	0	8

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஒரு அரிய சந்தர்ப்பம்!

இனி ஸ்திரீகளும்

இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

நாயுடு:—அம்மா! சற்று கவனித்து யோசனை செய். கணபதி வேண்டுமென்று யாரையும் மோசஞ் செய்யவில்லை. திலகவதியின் மீது பகை இல்லை. அவனை யறியாது நேர்ந்துவிட்ட விஷயமிது. அதாவது கணபதியின் கையில் பேனவோ, பென்ஸிலோ, பல பமோ எது கிடைப்பினும் எந்த காகிதத்திலும் முதலில் தன் பெயரை எழுதிக்கொண்டே இருப்பது வழக்கம்.

இது வெகு நாட்களாக சுபாவமாக நடக்கும் வேலை என்று அறிந்தேன். இந்த வழக்கத்தை அவ்விருவரும் நன்ருகக் கவனித் திருக்கிருர்கள். ஆனல் அப்போது அவர்களின் மூளையில் ஒன்றும் தோன்றவில்லை. கேடு காலம் வருவதற்கு முன்பு தானே புத்தியும் விபரீதமாகும். கோண வழியில் தேர்ச்சி பெற்ற சோமுவும் அங்கச் சியும் சேர்ந்து இந்த காகிதங்களை எல்லாம் கவனித்துச் சேமித்துக் கொண்டு எந்தெந்த விடத்தில் கையெழுத்து இருக்கிறதோ அதற்குத் தக்கபடி இரண்டு வரிகளோ, நான்கு வரிகளோ டைப்பு செய்து தங்கள் காரியத்தைச் சாதித்திருக்கிருர்கள்.

இந்த விஷயத்தை நன்கறிந்த அங்கச்சி 'இந்த பேன நன்ரு யிருக்கிறதா; இதை க்ளீன் செய்து பாருங்கள்' என்று கூறி இருக்க வேண்டும். அப்போதெல்லாம் பேப்பரில் கிறுக்கி இருக்கிருன். அதையே அந்தப் புண்ணியவதி ஓர் ஆதாரமாகக்கொண்டு கத்தியை நைசாகத் தீட்டிவிட்டாள். இந்த ரகஸியத்தை நான் எப்படிக் கண்டு பிடித்தேன் எனில் அவ்விடத்திற்கு நான் இன்ஸ்யூரன்ஸ் ஏஜண்டுபோலச் சென்ற போதெல்லாம் அவரைக் கவனித்தேன். கையில் எதை எடுத்தாலும் அவர் தன் பெயரை எழுதியதைக் கவ னித்தேன். அதிலிருந்து எனக்குப் பெரிய யோசனை தோன்றியது. உடனே போலீஸாரிடம் உள்ள கடிதங்களை எல்லாம் வாங்கிப் பார்த்தேன்; நான் சந்தேகித்தது சரியாகிவிட்டது. இந்த ரகஸி யத்தை அவர்களிடத்தில் நான் இன்னமும் தெரிவிக்கவில்லை.

அவர்கள் யார் யார்மீது சந்தேகப்பட்டார்களோ, அவர்கள் கையெழுத்தை எல்லாம் சோதித்து ஆராய்ந்துகொண்டே இருக்கி ருர்கள். அவர்கள் வேலையை அவர்கள் செய்யட்டும்; என் வேலையை

நான் செய்யலாம் என்று என் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு வந்துவிட்டேன்.

அம்புஜா! இது எப்படி வேடிக்கையாக விருக்கிறது பார்த்தாயா! இந்த குற்றம் கணபதிக்கு இன்னும் தெரியாது. இந்த விஷயம் எல்லோருக்கும் மிக்க பிரமிப்பாய் இருக்கும். இவ் விஷயத்தை நான் துப்பு துலக்கியதிலிருந்து பல வேறு எண்ணங்கள் தோன்றுகின்றன. யாராயினும் அனுவசியமாகத் தம் பெயரை ஒரு வேடிக்கையாகக் கூட எதிலும் எழுதுவதே கூடாது; அவ்வாறு எழுதுவதால் எத்தகைய தீங்கு தலைக்கு வந்துவிட்டது பார்.

இவர்களுக்கு க்ஷாத்திர முள்ளவர்கள் யாரேனுமிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள். இந்த கையெழுத்தை வைத்துக்கொண்டு இவன் எழுதியது போல திட்டியோ, குற்றமாயோ, துஷ்டத்தனமாயோ கடிதம் ஜோடித்து அனுப்பி இவன் தலைக்கே கத்தி வைத்துவிடலாம். இதை விட மோசமானது இன்னொன்று இருக்கிறது. இக் கையெழுத்துடன் யாரேனும் ஒரு பெண் மணிக்கு அக்ரமக் கடிதம் எழுதியதுபோல எழுதிப் போட்டுவிட்டால் என்னவாகும்.

மோசக் கருத்துடையவர்கள், போக்கிரிகள், முதலியவர்களிடம் அகப்பட்டால் எவ்வளவு பெரிய கஷ்டத்தில் முடியும்? யாரும் அனுவசியமாகத் தம் பெயரைக் கண்ட விடத்திலும் எழுதுவதைப் போன்ற குற்றம், அபாயம் வேறு எதுவுமில்லை. அப்படி எழுதும் படித்தோன்றினால் ஸ்ரீராமஜெயம், வந்தேமாதரம், கிருஷ்ணார்ப்பணம் முதலியன எழுதினால் நன்மையுண்டு. அம்புஜா! இது வரையில் நான் துப்பறியும் வேலை செய்தது கணக்கில்லை. இந்த கேஸில்தான் நான் அதிசயமாக இவ்விரண்டு விஷயங்களைக் கண்டு பிடித்தேன். இந்த விஷயத்தைக் கணபதிக்குத் தெரிவித்தால் ஆச்சரியப்படுவார். இனி யாரும் அனுவசியமாக வெறுங் காகிதத்தில் பெயரை எழுதக்கூடாதென்று இந்த கேஸ் ஓர் பாடத்தைக் கற்பித்துவிட்டது...சரி; நேரமாகிவிட்டது. நாம் இப்போது எங்கு செல்லலாம்?'' என்றார்.

மேற் குறித்த விஷயத்தைக் கேட்டு மிக்க ஆச்சரியமடைந்த அம்புஜம், "ஆகா! அப்பா! இந்த விஷயம் எனக்கு வெகு ஆச்சரிய மாயிருக்கிறது. நம்மைப் போன்றவர்கள் அவ்வாறு பெயர் எழுதி விட்ட கடிதம் நமது விரோதிகளிடம் கிடைத்து விடுமாயின் நம்மை அதைக் கொண்டே கொலையாளிகளாகவும் செய்து விடுவார்கள் அல்லவா?...அப்பா! பயங்கரமாக இருக்கிறது. ஐயோ! பாவம்! திலகவதியின் மீதும், சுகுமாரன் மீதும் பழி சார்ந்ததாலன்றோ இப்போது இத்தனை கஷ்டங்கள் வந்து லபித்தன... நாம் முதலில் சோமுவையே துடருவோம். இப்படியே செல்வதா? வேறு மாறு வேடத்துடன் போகலாமா?" என்றாள்.

நாயுடு:—அம்மா! நீ வீட்டிலிரு. நான் முதலில் சென்று சில விஷயங்களைக் கவனித்து வருகிறேன்; பிறகு செல்லலாம்—என்று கூறிவிட்டு வெளியில் சென்றார்.

நாயுடுவின் உள்ளத்தில் அபாரமான ஆநந்தம் ஊற்றுப்போல் சுரந்தது. "திலகவதியை உயிரோடு கண்ணில் கண்டுவிட்டால் கேஸில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டது போலத்தான்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு நடக்கவாரம்பித்தார். அப்பொழுது சிலு சிலுப்பான காற்று வீசும் மாலைப்பொழுதாகையினால் வெகு ரமணீகரமாக விருந்தது. நாயுடு ஓர் மாட்டு வண்டி யமர்த்திக் கொண்டு தன்னை இன்னாரென்று ஒருவரும் தெரிந்து கொள்ளா வாரு முண்டாசுடனும் அதற்குத் தகுந்த வேஷத்துடனும் வண்டியிலேறிப் பிரயாணமானார்.

சோமுவின் இருப்பிடத்திற்குச் சென்று விசாரித்ததில் அவன் காணப்படவில்லை. அங்கிருந்தவர்களை விசாரித்ததில் "ஆத்தங் கரெக்குப் போனாரு" என்று கூறினார்கள். உடனே நாயுடு அங்கு வண்டியைத் துரத்தினார். நன்றாக அஸ்தமிக்கும் சமயமாகி விட்டது. ஆற்றங்கரைக்கும் இவரிருக்கும் இடத்திற்கும் சுமார் 5, 6 மைல் தூரம் இருக்கும். மாட்டு வண்டியில் போவதற்கு அதிக நேரமாகும் என்று யோசித்து மோட்டார்கார் அமர்த்திக்கொண்டு வேகமாகக் கிளம்பினார்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஆற்றங் கரையைச் சேர்ந்தார். அங்கு சில ஜனங்கள் காற்று வாங்கிக்கொண்டிருந்தார்கள். அங்கு சுற்று முற்றும் பார்த்தார். தான் தேடி வந்த ஆசாமி அங்கு காணவில்லையாதலால் தனிமையில் உலாவுவதுபோல வெகு தூரம் சென்று பார்த்ததில் அந்த ஆற்றின் தண்ணீர் வாய்க்கால் போலப் பிரிந்துபோகிறது. அதற்கடுத்தாற்போல மலைகள் காணப்பட்டன.

அவ்விடம் ரமணீயமாயிருக்கிறதென்று நாயுடு அதன் இயற்கையழகைப் பார்த்துக்கொண்டே சென்றார். அங்கு சிறிது தூரத்தில் ஓர் இடிந்த கட்டிடம் தெரிந்தது. அதைக் கண்டு சற்று சந்தேகங்கொண்டு நாயுடு அவ்விடத்திற்குச் சென்றார். செல்லும் வழியில் துணி முடிச்சு ஒன்று கிடக்கக் கண்டு அதை எடுத்துப் பார்த்தார். அதனுள் ஓர் கல்லை வைத்துச் சுற்றி இருந்தது. அத்துணியை உற்றுக் கவனித்தார். அது முந்தானை என்றும் அதிலிருந்து கிழித்ததென்றும் நொடியில் தெரிந்துகொண்டு கவனித்தார்.

பூனூலால் அதன் ஒரு பாகத்தில் திலகவதி என்று தைத்து சுற்றிலும் பூக்கொடிகள் வேலை செய்திருந்தன. அதைக் கண்டு நாயுடு பரம ஆச்சரியமடைந்தார். இந்த முந்தானையின் தலைப்பில் இவ்விதம் கல்லை ஏன் சுற்றி இருக்கவேண்டும்? இதைக் கவனித்தால் எங்கே இருந்தோ இதை விட்டெறிந் திருக்கவேண்டுமென்று தெரிகிறதே! எங்கிருந்து இதை யார் விட்டெறிந்திருப்பார்?'' என்று அவர் இதை வைத்துக்கொண்டு யோசிக்கையில் இரண்டு மூன்று பேர்கள் அங்கு வந்தார்கள்.

வந்தவர்கள் நாயுடு இத்துணியை எடுக்கும்போது பார்த்துக்கொண்டே வந்துவிட்டார்கள்; ஆதலால் அவர்கள் சற்று உரக்கச் சத்தமிட்டு "ஐயா! இதைத் தொடாதீங்க! ஐயோ! போட்டுடுங்க! இது இண்ணிக்கி ஒரு பிசாசு...இல்லீங்க...மோகினி தேவதைங்க அதோ தெரிதெ! அந்த பாயு ஊட்டெ இருந்து எங்க மேலே வீசி எறிஞ்சிச்சு...அப்பொ நாங்க அத்தெ கவனிக்கிலே! ஏதோ துணி காத்துலெ உயிந்தது இண்ணுப்புட்டுப் பாத்தோம்! அப்பறம் அது

கையைக் காட்டிக் காட்டி எங்களெ எல்லாம் கூப்பிடுச்சு. ஐயோ! கொயந்தெங்களும் நாங்களும் பயந்துப் பூட்டோம். ஊட்டுக்கு ஓடியே பூட்டோம். அப்பறம் ஒரு மந்திரக்கார அய்யாவெ இட்டாந்து அந்த பேயே ஓட்டிப்புட்டோம்" என்றார்கள்.

இம் மொழி நாயுடுவின் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்தது. அவர் தன்னுச்சரியத்தோடு "ஹா! பிசாசா வந்தது. என்ன வேடிக்கை. அது எப்பிடி இந்திச்சு? நீங்க பாத்தீங்களா! ஐயோ! பிசாசுன்னலே பயமாக்கீதப்பா!" என்றார்.

வழிப்போக்கன்:—அத்தெ ஏங் கேக்கீரீங்க. அது மூஞ்சை நாங்க பாக்கலே! கையை மட்டும் வெளிலே உட்டு ஆட்டிச்சு. கை தங்கமாட்டமா மின்னிச்சு. மனுஷா கை அப்பிடி இருக்குமா சாமி! கை எப்பிடி இந்திச்சீங்கிரீங்க, தள தள பள பள இன்னு மின்னிச்சி. அதை மோகினி தாண்ணுப்புட்டு மந்தரக்காரன் சொன்னு னுங்க.

நாயுடு:—ஒகோ! மந்திரக்காரன் அத்தெ ஓட்டச்செ நீங்க பாத்தீங்களா?

வழிப்போக்கன்:—எதிரே யாராச்சும் இருந்தா புடிச்சுக்கம். நீங்க பூடுங்க இண்ணுரு. அல்லாரும் பூட்டாங்க. நானு மட்டும் மரத்து மறவுலெ ஒளிஞ்சிகினு பாத்தேனுங்க. அது எங்கே புடிச்சிகிதோ இண்ணு பயந்திகினே பாத்தேன். அந்த மந்திரவாதி சொன்னது உளுமே தானுங்க. என்ன அயவு மொகினீங்கராங்கோ, பாலு வடியுது, ஒல்லியாக்கீது. நகெ கிகெ எதுவுமே இல்லீங்க. அவன் இன்ன மந்தரம் போட்டானே தெரியாதுங்க. அவன் பின்னேடே நடந்து போயிடுத்துங்க.

நாயுடு:—ஆ! அப்படியா! எங்க ஊட்டெ ஒரு பொண்ணெ மோகினி புடிச்சிகினு ஆட்டு ஆட்டுண்ணு ஆட்டுது. அந்த மந்தரவாதி ஊட்டே கொஞ்சங் காட்டுங்களேன். புண்ணியமுண்டு.

வழி:—அவனுக்கு வூடு கீடு ஒண்ணுங் கெடயாதுங்க. அதோ அங்கை புள்ளாரி கோயிலுக் கீது பாருங்க அதுலே வந்து குந்திகினு பாடுவான். அதுதான் தெரியும்—என்றான்.

நாயுடு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு அந்த துணியை எடுத்துக்கொண்டு நேரே அந்தப் பாழ் வீட்டிற்குச் சென்றார். அப்போதும் அது பூட்டப்பட்டிருந்தது. நாயுடு மாறு சாவியால் அதைத் திறந்துகொண்டு உள்ளே சென்று தாழ்ப்பாளிட்டுக்கொண்டார். தன் கையிலிருக்கும் டார்ச்சு விளக்கினல் வெளிச்சம் செய்துகொண்டு சுற்று முற்றும் பார்த்தார். நாற்புறமும் இடிந்தும், நாகதாளி படர்ந்தும் அலங்கோலமாக விருக்கக்கண்டார்.

மோகினி என்று மருண்டது திலகவதியாகத் தானிருக்கவேண்டும் என்று நாயுடுவுக்கு நன்ருகத் தோன்றியதால் "இவ்விடத்திலும் முன்போன்ற சாமார்த்திய வேலை ஏதேனும் செய்திருப்பாளோ!" என்று கவனித்துக்கொண்டே வந்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு பொடி மட்டை மட்டும் கிடந்தது. முற்றிலும் பார்த்துக்கொண்டு திரும்பி வருகையில் வீதியில் மனிதர்களின் பேச்சரவம் கேட்டது. நாயுடு கதவின் இடுக்கில் நின்று சம்பாஷணையைக் கவனித்தார். அப்பொழுது நன்ருக இருட்டிவிட்டது.

வெளியில் பேசியவர்கள் மிகவும் மெல்லிய குரலில் பேசியதால் நாயுடுவின் செவியில் ஒன்றுமே விழவில்லை; எனினும் திலகவதியை இங்கு வைத்தவர்கள் தான் வருகிருர்கள் என்று தெரிந்துகொண்டார். தான் வெகு உஷாராக கதவின் பக்கமே நின்ருர். கதவு உள்புறம் தாழ்ப்பாள் போட்டிருப்பதைக் கண்டு வெளியிலிருப்பவர்கள் திகைத்துப் பேசிக்கொண்டு தாழ்ப்பாளின் சமீபத்தில் ஓர் துவாரம் செய்து கதவைத் திறந்துகொண்டு இரண்டு பேர்கள் கையில் விளக்கோடு உள்ளே நுழைந்தார்கள்.

அவர்களைப் பார்த்த உடனே நாயுடுவுக்குச் சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. சோமுவும் மற்ருெருவனும் "ஆகா! இந்தப் பூட்டையார் உடைத்திருப்பார்கள்? எனக்குப்பெரிய சந்தேக மாகிவிட்டதே! நாயுடுப்பயல் தான் என்று எண்ணினேன். அதுவும் இல்லை. இந்த கடிதத்தைப் பார்த்த பிறகு மந்திரவாதியே இதில் வேலைசெய்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது இங்கு யார் கதவைப் போட்டுக்

கொண்டிருக்கிறார்கள். சரியாகக் கவனித்துப் பாரு.'' என்று கூறிக் கொண்டே தேடினான்.

இவைகளை எல்லாம் நாயுடு நன்றாகக் கேட்டுக் கொண்டே இருந்தார்: தானிருப்பதைக் காட்டிக் கொள்ளாமலேயே இவர்கள் எங்கு செல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்க எண்ணியவராய் அவர்கள் உட்புறம் பார்த்துக்கொண்டு வரும் சமயம் ஓசை செய்யாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து வீதியில் ஒரு புறமாக நின்றுகொண்டிருந்தார்.

சோமுவுக்கு உண்டாகிய ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. தான் அன்றுதான் கொண்டு அடைத்துச் சென்ற திலகவதியை எப்படி அந்தப் படவாப் பயல் கொண்டு போய்விட்டான் என்று ஆவேசத்துடன் முற்றிலும் தேடிவிட்டு வீதியில் வந்தான். "உள்ளே தாழ்ப்பாள் எப்படித் தானகப் போட முடியும். ஒரு வேளை தாழ்ப்பாளைப் போட்டுவிட்டுச் சுவர்மீது ஏறி குதித்து விட்டார்களா!.... எது எப்படியேனுமிருக்கட்டும். முதலில் இப்போது திலகவதியைக் கண்டு பிடிக்காவிடின் காரியம் கெட்டு விடும்.'' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, சிறிது தூரத்தில் நிறுத்தி இருந்த மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு மாட்டை விரட்டலானான்.

நாயுடு தன்னிடமிருந்த கறுப்பு கம்பிளியை எடுத்துத் தலை முதல் கால் வரையில் போர்த்திக்கொண்டு அந்த வண்டியைத் தொடர்ந்து அதன் பக்கத்திலேயே வேகமாக நடந்தார். வண்டி வெகு வேகமாகப் பறந்து ஒரு தெருக் கோடியில் நின்றுவிட்டது. சோமு கால் நடையாகவே அங்கச்சியம்மாள் வீட்டிற்குள் ஆவேசத்துடன் நுழைந்தான். அப்போது மணி சுமார் 8—9 இருக்கலாம்.

அங்கச்சியம்மாள் யாருடனே பேசி யனுப்பிவிட்டு அப்போதுதான் உள்ளே வருவதாகத் தெரிந்தது. அங்கச்சியம்மாளுக்குப் பேசுவதற்கு யாரிருக்கிறார்கள். குடு குடுப்பைக்காரனே! அவன் சில முக்கிய விஷயங்களைப் பேச வந்தான்.

அங்கச்சி:—ஐயா! நான் தங்களையே நம்பி இருக்கிறேன். அந்தச் சிறுக்கியை அவ்வளவு சாமார்த்தியமாகக் கண்டு பிடித்ததற்

காக இதோ இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக் கொள்ளுங்கள். இது விஷயம் என் தம்பி எப்படியாவது தெரிந்துகொண்டு அங்கு வந்துவிட்டால் என்ன செய்வது? என் குழந்தைகளை எப்படித் தனிமையில் விட்டு விடுவது?

குடுகுடு:—அம்மணீ! இதற்கெல்லாமா பயம்! இதோ இந்த பவுடர் இருக்கிறதே; இதை இன்று ஆகாரத்தில் கலந்து உங்கள் புருஷன், குழந்தைகள் எல்லோருக்கும் கொடுத்து விடுங்கள். ப்ராண பயமில்லை. நாளைக் காலை வரையில் மயக்கம் தெளியாது. நீங்கள் நிர்ப்பயமாக விருக்கலாம். காலையில் உங்களுடைய புதையல் சுவர்ணத்தை வெகு மகிழ்ச்சியோடு உங்கள் புருஷனுக்கும் குழந்தைகளுக்கும் காட்டலாம். அப்போது அவர்களடையும் ஆநந்தத்தை விட வேறுண்டா! இதையே உங்கள் தம்பிக்குக் கொடுத்து விடுங்கள். சரியாகி விடுகிறது. நான் மோட்டாரை மட்டும் அனுப்பி விடுகிறேன். நீங்கள் வந்து விடுங்கள்.—என்றான்.

அங்கச்சி அந்தப் பவுடரை வாங்கி வைத்துக்கொண்டு அவனை யனுப்பிவிட்டு அப்போதுதான் உள்ளே வந்தாள். அதே சமயம் சோமுவும் அங்கு வந்து சேர்ந்தான். சோமு அங்கச்சியம்மாளை ஓர் தனித்த இடத்திற்கு அழைத்துச் சென்று "அக்கா! நீ என்ன வேலை செய்திருக்கிறாய் என்பது எனக்கு விளங்கிவிட்டது. உனக்கு அப்போது வந்த கடிதத்தை நீ எனக்குக் காட்டாது மறைத்துவிட்டது முதல் எனக்குச் சந்தேகம் உண்டாகியதால் நான் உன் பெட்டியிலிருந்து மாறு சாவியின் உதவியால் கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்" என்ற உடனே அங்கச்சியம்மாள் திடுக்கிட்டு அலறினாள்.

மீண்டும் சோமு பேசத் தொடங்கி "அந்த கடிதத்தை நான் படித்து விஷயமறிந்து கொண்டேன். உனக்கும் மந்திரவாதிக்கும் ஏதோ கேடு காலம் வந்து விட்டது. அதனால்தான் இவ்விதம் செய்திருக்கிறீர்கள். இந்த விஷயத்தை இக்ஷணமே போலீஸில் தெரிவித்து உங்கள் கதியை அதோகதி யாக்கும் சக்தி என்னிடம் இல்லாமல் போகவில்லை" என்று கூறி முடிப்பதற்குள் அங்கச்சியின் குலை நடுக்கலுற்றது; சற்று யோசித்தாள்.

"அப்பா! சோமூ! என்ன இது! இப்படி ஆத்திரப்படுகிறுயே! நான் உன்னையா மோசம் செய்வேன்? என்னிடத்தில் உனக்கு நம்பிக்கை இல்லாது போனதேன்? நான் உன்னைத் துணை கொள்ளாமல் ஒரு வேலையைச் செய்வேனு! நானுக உன்னிடம் விஷயத்தைக் கூறுவதற்குள் இவ்விதம் ஆத்திரப்பட்டு விட்டாயே! சோமூ! நான் என்ன தீர்மானித்திருக்கிறேன் தெரியுமா! நமக்கு முக்கியமானது புதையல். அந்த அல்ப நாய் குடுகுடுப்பைக்காரன் இருக்கிறுனே அவன் உன்னிடம் ஏதோ பயப்படுகிறுனும். அதனுல் அவன் உனக்குத் தெரிந்து விடப் போகிறதே என்ற பயத்தினுல் இப்படி எழுதி இருக்கிறுன்.

சோமூ! இன்னெரு ரகஸியம். திலகவதியை நீயே ஒளித்திருக்கிறுய் என்பது எனக்குத் தெரியாதல்லவா! அவள்மீது நீ உயிரை வைத்திருப்பதால் அவளை எப்படியாவது தேடிப் பிடித்து உனக்குக் கல்யாணம் செய்வித்து ரகஸிமாய்க் கப்பலேற்றி விடலாம்; புதையல் சொத்திலும் பாதி கொடுத்து அனுப்பலாம் என்று எண்ணி அவளைத் தேடச் சொல்லி இருந்தேன். அவனும் தேடி விட்டானும். இன்று இரவு போகலாம். அங்கு நாம் ஒன்றும் தெரியாத சாதுவைப்போல இருப்போம். திலகவதியைப் பலி கொடுக்கும் பொருட்டு கொண்டு வருவானல்லவா! அப்போது அவளை நாம் அழைத்துக்கொண்டு அங்கிருப்பவர்களில் ஒருவரை நாமே வெட்டி பலி கொடுத்து விடுவோம். புதையல் கிடைத்ததும் நாம் எடுத்துக் கொண்டு மற்றவர்களை சுட்டுத் தள்ளிவிட்டு ஓடி வந்து விடலாம். நீ நிறைய தோட்டாக்களடங்கிய இரண்டு துப்பாக்கிகளைத் தயார் செய்துகொண்டு வா; உம். தெரியுமா!...நான் இப்படி எல்லாம் யோசனை செய்திருக்கையில் நீ என்னை வித்யாசமாக எண்ணிவிட்டாயே! நீ முதலில் இங்கேயே சாப்பிட்டு விட்டு உனது ஆட்களில் 4—5 பேர்களைக் கூட்டிக் கொண்டு வந்து விடு" என்று வெகு பக்குவமாகக் கூறினுள்.

துர்க் குணத்தினருக்கும் மோசக்காரர்களுக்குங்கூட நம்பிக்கை என்பதும், ஏமாற்றம் என்பதும் உண்டாகையினுல் சோமு இதையே உண்மை என்று நம்பி விட்டான். அங்கச்சியம்மாள் குடு

குடுப்பைக்காரனின் மருந்து உபயோகத்தை முதலில் சோமுவி னிடமே பார்க்கத் தொடங்கி, சாப்பாட்டில் பொடியை அளவுக்கு மிஞ்சியே கலந்து வெகு பரிவுடன் போட்டுவிட்டாள். சோமு தன் தமக்கை காட்டும் அன்பை மிகவும் உண்மையானது என்று நம் பியதால் "அக்கா! நான் ஆத்திரப்பட்டுவிட்டேன். உன்னுடைய அந்தரங்கப் பிரியத்தை யறியாது போய்விட்டேன். உன்னைக் கொலை செய்வதென்றுகூடத் தீர்மானித்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினன்.

அங்க:—அதற்கென்னடா அசடே! ஒன்றுமில்லை. ஆத்திரத் தில் அப்படித் தானிருக்கும்;எனக்குக் கோபமே இல்லை.—என்றாள். சோமுவும் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு எழுந்தான். அப்போதே மயக்கம் கிறுகிறுப்பு முதலியன வாரம்பித்தன. உடனே அவன் கை யலம்பிக்கொண்டு ஒரு அறையில் சென்று உட்கார்ந்தான். 10 நிமி டத்திற்கெல்லாம் "அக்கா! எனக்கு அதிக அலைச்சலினுல் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது. நீ சாப்பிட்டவுடனே என்னை எழுப்பு என்று கூறிப் படுத்துவிட்டான்.

'அப்பா! ஒரு காரியம் முடிந்தது' என்று சந்தோஷ மடைந் தாள் அங்கச்சி. பிறகு தன் குழந்தைகளுக்கும், புருஷனுக்கும் சாப் பாட்டில் அப்படியே பொடியைக் கலந்து போட்டுவிட்டாள். இரண்டாவது, மூன்றாவது என்று வரிசையாகப் படுத்துவிட் டார்கள். அதன் பிறகே நாம் தெரிவித்ததுபோல அங்கச்சி அவ் விடம் விட்டுச் சந்தோஷமாகச் சென்றாள்.

சோமுவைத் தொடர்ந்துகொண்டு வந்த நாயுடு அங்கச்சியம்மா வின் வீட்டிற்குள் அவன் சென்றதும் அங்கு தானும் செல்வதற்கு வழி கிடைக்காமையினுல் "எவ்விதம் உள்ளே போகலாம்?'' என்று எட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தார். உள்ளே சென்ற சோமு வெகு நேரமாகியும் வெளியே வராமையினுல் அவருக்கு இன்ன தென்று புரியாமல் சந்தேகம் உண்டாய்விட்டது.

உடனே அவர் நேரே தன் வீட்டிற்கு வந்தார். அம்புஜத்தி னிடத்தில் அங்கு நடந்த விஷயங்களை எல்லாம் கூறி "அம்புஜா!

இதில் எத்தனை சிக்குகள் இருக்கின்றன தெரியுமா? உள்ளே போன சோமு வரவே இல்லை. அவன் எத்தனை நாழிகை சென்று வெளியில் வந்தாலும் சரி அன்றி எந்த விதமாகவேனும் நான் உள்ளே நுழைந்து அவர்களைக் கவனிக்கவேண்டும். ஏதோ கடிதம் என்று பேசிக்கொண்டார்கள். அதை முக்யமாகப் பார்க்கவேண்டும். அது சோமுவிட மிருப்பதாகத் தெரிகிறது, நான் செல்கிறேன்; எனக்கு ஏதேனும் அபாயம் நேருமாயின் நீ வந்து கவனித்துக்கொள்:" என்று கூறிவிட்டு வந்தார்.

இராப் பிச்சைக்காரர் போல சாப்பாடு கேட்டுப் பார்த்தார்; கதவைத் திறக்கவில்லை. அவர் வீதிப்பக்கமே இருந்து கவனித்துக் கொண்டு வந்தார். ஆதலால் அங்கச்சியம்மாள் வெளியில் சென்றதைக் கவனிக்க முடியவில்லை. வெகு நேரம் ஆய்விட்டது. சந்தடியே இல்லாமையினால் நாயுடு வெகு சந்தேகத்துடன் பின்புறம் சென்று தன் டார்ச்சு விளக்கை ஏற்றிக்கொண்டு தோட்டத்து வழியாகச் சென்றார். தோட்டம் ப்ரம்மாண்டமானதாகையினால் துஷ்ட ஜந்து, பாம்பு முதலியன இருக்குமோ வென்று கீழே பார்த்துக்கொண்டே சென்றார்.

அப்படி கவனிக்கையில் மோட்டார் அவ்வழியே சென்றது போல டயரின் அடையாளம் மண்மீது தெரிந்தது. ஐயோ! மோட்டார் சென்றிருக்கிறதே; நாம் வீதிப்பக்கமே நின்று ஏமாந்துவிட்டோமே!" என்று சிந்தித்தவாறு உள்ளே சென்றார். பின்புறக் கதவு வெளிப்பக்கம் சாத்திப் பூட்டி இருந்தது. இதைக் கண்டதும் அவர் சந்தேகம் அதிகரித்தது. "ஆகா! இவர்கள் கதவைப் பூட்டிக் கொண்டு எங்கேயோ போருக்கிறார்கள். உள்ளே சென்று பார்ப்போம்" என்று தீர்மானித்து,கதவை மாறு சாவியால் திறந்துகொண்டு உள்ளே சென்று தன் விளக்கின் வெளிச்சத்தினாலே பார்த்தார். சோமு ஓர் அறையில் படுத்திருப்பது கண்டு ப்ரமித்தார். ஒருகால் தூங்கிவிட்டானோ என்று எண்ணி அருகில் சென்று எலி பூனை முதலியன கத்துவதுபோலப் பார்த்தார்; அவன் அசையவே இல்லை; தபதபவென்று தட்டிப் பார்த்தார் ஒன்றுமில்லை. அவரது சந்தேகம் அதிகரித்தது; அருகில் சென்று மெல்ல ஜோபியில் கையைப்

போட்டுக் கடிதத்தை எடுத்தார். அதற்கும் ஆசாமி அசையாமையி னுல் அவருக்குப் பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது.

அப்படியே கடிதத்தைப் படித்தார்; விஷயம் நன்ருக விளங்கி விட்டது. "ஓகோ! சோமு இக் கடிதத்தைத் திருட்டுத்தனமாக எடுத்துப் பார்த்திருக்கிருன். இதை அக்காவிடம் சொல்லியோ வேறு பயமுறுத்தியோ இருக்கவேண்டும்; அதனுல் இவனே அவள் ஏதோ செய்திருக்கவேண்டும்......ஹா! ஹா! ஹா! என்ன கொடுமை! திலகவதியைப் பலி கொடுத்துப் புதையல் எடுப்பதாமே; ஐயையோ! பலி விஷயமாக முன்பு கூட சுகுமாரன் ஏதோ தெரிவித்திருப்பது நன்ருக நினைவிருக்கிறது; அடி கொடிய விஷமே! நீ புதையல் எடுக்கும் சம்பிரமமா இது! ஹா! இனி நாம் தாமதிக்கலாகாது; உடனே சென்று திலகவதியைப் பலி கொடுக்கவிடாமல் தடுக்கவேண்டும்" என்று வெகு விரைவாக அவ்வீட்டை முற்றும் ஒரு சுற்றுப் பார்த் தார்.

கணபதியும் மயங்கிக் கிடக்கிருன்; சிறு குழந்தைமுதல் மயங் கிக் கிடக்கிறது. சின்ன குழந்தைமட்டும் படுக்கையிலேயே வாந்தி எடுத்து விட்டுத் திணறிக்கொண்டு கோணல் மாணலாக இழுத்துக் கொண்டிருந்த கோர காக்ஷியைக் கண்டு நாயுடுவின் மனம் பதறியது. அந்த வாந்தியைத் துடைத்து குழந்தையைக் கவனித்தார். வாந்தி யில் அந்தப் பவுடரின் நாற்றம் வேகமாக அடித்தது. உடனே அவ ருடைய சந்தேகம் அபாரமாகப் பெருகிவிட்டதால் வீதிக் கதவைத் திறந்துகொண்டு வேகமாக ஓடி ஒரு டாக்டருக்கு டெலிபோன் செய்தார்; போலீஸாருக்கும் தன் வீட்டாருக்கும் கூட டெலிபோன் செய்தார்.

அடுத்த விஞடி டாக்டர் வந்துசேர்ந்தார். அவர் வந்து குழந் தையைக் கவனித்துச் சிகிச்சை செய்வதற்குள் குழந்தை இறந்து விட்டது. உடனே டாக்டர் மற்ற குழந்தைகளைக் கவனித்தார். எல்லாம் உணர்வற்றுக்கிடந்தன. கணபதி, சோமு, குழந்தைகள் முதலி யோருடைய ரத்தத்தை எடுத்துச் சோதித்ததில் அந்தப் பவுடர் பிரயோகம் செய்திருப்பதை நன்ருகத் தெரிந்துகொண்டார்; இது பெரு மோசம், பெரியவர்களுக்கே இது அளவுக்கு மீறிவிட்டால்

ஆளைக் கொன்றுவிடக்கூடிய பவுடராயிற்றே; இது குழந்தைக ளுக்கு எவ்விதம் தாங்கும். இந்த இரு குழந்தைகளின் ரத்தத்தில் நன்றாகக் கலந்துவிட்டதால் இவையும் பிழைப்பது சந்தேகந்தான்; பெற்ற பாவியா இதைக் கொடுத்தாள்!" என்று டாக்டர் ஆச்சரியப் பட்டார்.

21004b.

இதற்குள் போலீஸார், அம்புஜம் முதலியோர் வந்துவிட் டார்கள். நாயுடு நடந்த சகல விஷயங்களையும் கூறிக் கடிதத்தையும் காட்டினார். இன்ஸ்பெக்டர் இடியாப்பத்தின் முகம் கறுத்துவிட்டது. அந்த கேஸில் தான் அபாரமான புகழைப் பெறுவதோடு, ராவ் சாகிப் பட்டமும், டெபுடி சுபரின்டென்டென்ட் வேலையும் தனக்குக் கிடைக்கப்போகிறது என்று எதிர்பார்த்துக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தார். அதெல்லாம் நாயுடுவால் இடிந்து விட்டதால் அவர் முகம் கருக்காமல் என்ன செய்யும்? சுருங்கியும் விட்டது.

நாயுடு அங்கு சில போலீஸ் வீரர்களையும் இன்ஸ்பெக்டரை யும் வைத்துவிட்டு, தன்னோடு சில போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு வேண்டிய ஆயுதங்களோடு புறப்பட்டார். அவர்கள் எந்த விடத்தில் பூஜை போடுகிறார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாது. நாயுடு சோமுவின் கூட்டாளிகள் இருக்குமிடம் அறிவாராதலால் அங்கு சென்றார்.

அவர்கள் நித்திரை செய்து கொண்டிருந்ததால் எழுப்பித் தாங்கள் அவர்களைக் கைதி யாக்குவதற்கு வந்ததாயும், அவர்களெல் லாம் ஏற்கெனவே சிறைச்சாலையினின்றும் தப்பி யோடிய கைதிகள் என்பதைக் கண்டு பிடித்து விட்டாதாயும் நாயுடு கூறியதைக்கேட்டு எல்லோரும் ப்ரமித்து நடு நடுங்கிப் போய் விழிக்க வாரம்பித் தார்கள்.

நாயுடு:—இனிமேல் நீங்கள் தப்புவது ஒரு நாளும் முடியாத காரியம்; உண்மையைக் கூறிவிட்டால் ஏதோ கூடிய வரையில் அதிக தண்டனை இல்லாமல் காப்பாற்றுகிறேன்—என்று கூறினார்.

அவர்கள் இப்படி நேரும் என்று கனவிலும் கருதவில்லை யாதலால் ப்ரமை கொண்டு ஷாக்கு அடிக்கப் பட்டவர்கள்போலக்

கலங்கி நாயுடுவின் காலில் விழுந்து கோவென்று கதறி யழுதார்கள். நாயுடு புதையல் விஷயமான விவரத்தைக் கேட்டார்.

அவர்கள்:—சாமீ! எங்களுக்கு ஒன்றும் தெரியாது. உண்மையில் நாங்கள் புதையல் விஷயத்தில் சம்பந்தப்படவில்லை. சோமுவுக்குப் பங்கு வருமென்றும் எங்களுக்குக் கொடுப்பதாயும் கூறியதோடு, முதல் நாள் சோமுவும் அவன் சகோதரியும் புதையலைப் பார்க்கச் சென்றபோது அவர்கள் திரும்பி வருகையில் வழி பறித் திருடர்கள்போல எங்களை வந்து அவர்களிடமிருப்பதை எல்லாம் கொள்ளை யடித்துக்கொண்டு போகச் சொன்னான். நாங்களும் அவன் வார்த்தையினால் அப்படியே செய்தோம். அதன்பிறகு வேறு எதுவும் தெரியாது. அந்த இடம் ஈசானிய மூலையில் ஏழு மைல் தூரத்திலிருக்கிறது—என்று சொன்னார்கள்.

தற்சமயம் இவ்வளவு விவரம் கிடைத்தது போதுமென்று எண்ணி அவர்களை விலங்கிட்டு ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு ஒருவனை அழைத்துக்கொண்டு அந்த விடத்திற்கு வேகமாக மோட்டார் காரில் ஏறிச் செல்லலானார். அம்புஜத்தின் மனம் பத பதவென்று அடித்துக் கொள்ளுகிறது. இந்நேரம் திலகவதியின் கதி யாதாகி இருக்குமோ, என்ன நிலைமையில் அம் மின்னல் கொடியாளைப் பார்க்க நேருமோ! பெற்ற பிள்ளையைக் கொலை செய்த சண்டாளியின் முகத்தில் சாணியைக் கரைத்துக் கொட்ட வேண்டும்.'' என்று பல்வேறு எண்ணங்களுடன் போராடிக் கொண்டே போகிறாள்.

நாயுடு வெகு துரிதமாகத் தானே மோட்டாரை ஓட்டிக் கொண்டு சென்றார். வெகு தூரத்திற்கு முன்பே சாம்பிராணிப் புகையின் வாசனையும், வத்தியின் வாசனையும் எல்லோருடைய நாசியையும் துளைத்தன. தாரையும், தம்பட்டமும் ஓசை கேட்டன. அந்த திக்குதான் பலியிடும் இடம் என்று தெரிந்துகொண்டு நாயுடு அதற்குச் சிறிது தூரத்திற்கு அப்பாலேயே மோட்டாரை நிறுத்தி விட்டார். எல்லோருடைய கால் செறுப்பையும் கழற்றிவிடச் செய்தார். தீபம் தெரியும் அவ்விடத்திற்கு மெல்ல சந்தடி செய்யாமல் நடக்கலானார்கள்.

* * * *

திலகவதியை மரத்துடன் பிணைத்துவிட்டு அங்கச்சியம்மாளுக்குத் தேறுதல் கூறிப் பின் பூசாரி பூசைக்கு ஆரம்பித்தான். கலகலவென்று குலுங்கும் கங்காளத்தைக் கண்டு உடல் பூரித்த அங்கச்சியம்மாள் அதையே பார்த்து கொண்டிருந்தாள். வாயில் துணியடைக்கப்பட்டு விட்டதால் நிலை கலங்கிச் சவம்போல ப்ரக்ஞையற்று திலகவதி மரத்தோடு மரமாக ஆய்விட்டாள்.

பூசாரி உடுக்கையடித்து வர்ணித்துப் பூசைகள் போட வாரம்பித்தான். பூசை போட்டுக்கொண்டே அங்கச்சியம்மாளின்மீது விழுந்து அவளை யணைத்துக்கொள்ளப் போனான். இதுவரையில் உலகையே மறந்திருந்த அங்கச்சியம்மாள் "ஹா! இதென்ன! இதென்ன அக்ரமம்!" என்று கத்தினாள். அவன் சாமி ஆவேசம் வந்தவன்போல "ஹா! ஹா! அங்கச்சியம்மா! உன்னை இனி நான் விடுவேனோ? கண்ணான திலகவதியைப் பலிதான் கொடுப்பேனோ! அவளையும் உன்னையும் சேர்த்து என் ஆசைக் கண்ணாட்டிகளாக வைத்துக் கொள்ளவன்றோ இந்த பாடு பட்டேன்" என்று அவளை இறுகப் பிடித்துக்கொள்ளப் போனான்.

அங்கச்சியம்மாள் கதி கலங்கிப்போய் "ஹா! மோசமே! படு மோசமே! என்று திமிறித் திணறிக்கொண்டு விலகினாள். அதே சமயம் நாம் முன் தெரிவித்த வைத்தியர் அங்கச்சியம்மாளின் இரண்டு குழந்தைகளையும் பிரேதமாக அங்கச்சியம்மாளின் முன்பு போட்டு "மாது சிரோமணி! அங்கச்சித்தாயே! இதோ! உன் புதையல் ஆசையின் பலன். பதித்துரோகத்தின் பலன். ஓர் அனாதையை அவதிப்படச் செய்ததின் பலன், பேராசையும், துராங்காரமும், மோசபுத்தியும் கொண்டு செய்த காரியங்களின் பலன். உன் குழந்தைகள் பரலோகம் சென்றன. மகா மோசக்காரனான குடுகுடுப்பைக்காரனின் சிநேகத்தினால் அவனை நம்பி, அவன் கொடுத்த விஷத்தைக் குழந்தைகளுக்கு வார்த்தாயே! என் தாயே! யம்மாடி! இப்போது அந்த சந்தோஷங்களைச் சேர்த்து அடித்துக்கொண்டு அலறியழு!" என்றார்.

அந்தோ! இச் சந்தர்ப்பத்தை யாராலேனும் வர்ணிக்கத் திறமா! வர்ணிக்கத்தான் எல்லையுண்டா! அங்கச்சியம்மாள் "ஹா! என் செல்

லங்களே! என் கண்மணிகளே! ஐயோ! ஆழமறியாது சேற்றில் காலை வைத்துக் கொண்டேனே! என் செல்வக் குழந்தைகாள் என்று அலறி யடித்துக்கொண்டு சட்டார் என்று குழந்தைகளின் மீது விழுந்தாள். அவளுக்கு ஆகாயமும் பூமியும் ஒன்றாகிவிட்டன.

மதம் பிடித்த யானையைப் போல மதோன்மத்தாகப் பயமற்று இருந்த பூசாரி இந்த சம்பவத்தைப் பார்த்ததும் தன்னை மீறி திடுக்கிட்டு ஓட்டம் பிடிக்கத் தலைப்பட்டான்.

அதே சமயம் இந்த மனிதன் செய்துள்ள அனேக வேலைக ளின் சன்மானமாகத் துப்பாக்கி வெடிகளுடன் சில தோட்டாக்கள் பட்டார் என்று அந்த குடுகுடுப்பைக்காரனின் இரு கால்களிலும் கைகளிலும் தாவி நின்றன. ஏக காலத்தில் டப் டப் டப் டப் என்ற பல வெடிச் சத்தங்கள் கேட்டன. அன்று பவுர்ணமி கழிந்து சில தினங்களாகிவிட்டபடியால் முன்னிலவு இல்லை.

நாயுடு முதலியவர்களுக்கு உதவி செய்யவும், திலகவதியின் பரிதாபத்தைக் கண்டு சகியாமல் அவளைத் தனது குளிர்ந்த கிரணத் திரால் களை தெளிவிக்கும் பொருட்டும் வானுலகில் வெளிக் கிளம்பி யது போல் சந்திரன் தனது ஒளி மேகத்தில் மறையாமல் ப்ரகாச மாக ஜ்வலிக்கலானயினன். வெளிச்சம் நன்றாகத் தெரிவதால் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சி யுண்டாயது.

நாயுடு வரிசையாகப் பார்த்துக்கொண்டே வந்தார். பல வித மான அங்கிகளும், முக மூடிகளும் கட்டிக்கொண்டு பிசா சுகள்போலக் கத்திச் சத்தமிட்டு ஆரவாரம் செய்துகொண்டிருந்த வர்களும் பூமாதேவிமீது விழுந்தார்கள்.

அச்சமயம் இன்னொரு மோட்டார்கார் அந்த திக்கை நோக்கி பும் பும் என்று ஹாரன் செய்துகொண்டே வந்ததைக் கண்டு எல் லோரும் "இதென்ன கார்?" என்று ஆச்சரியமுற்றார்கள். "இக்கள்ள ரின் சகபாடிகள்தா னிருக்கவேண்டும்" என்று எண்ணி எல் லோரும் துப்பாக்கி சகிதம் தயாராக நின்றார்கள்.

மோட்டார் சமீபத்தில் வந்து நின்றதும் இன்ஸ்பெக்டர் இடியாப்பம் இறங்கினர். அவருக்கு அடுத்தபடி "ஹா! கண்மணீ! திலகவதீ! எங்கே! என் திலகம் எங்கே! என் காதல் கிளி எங்கே! என் இன்ப நிலையம் எங்கே!" என்று பித்தன் போலப் பிதற்றிக்கொண்டே சுகுமாரன் தலைவிரி கோலமாக இறங்கினன். "என் செல்வமே! திலகம்! என் வயிற்றில் பாலை வார்த்தாயா! அன்றி அப்படு பாவியின் அரிவாளுக்குப் பலியாகிவிட்டாயா! என் கிளியே! என் திலகவதீ!" என்று அலறியவாறு கோமளவல்லி யம்மாள் இறங்கினள்.

இவ் வேளையில் இவர்கள் இங்கு வருவார்கள் என்று நாயுடு, அம்புஜம் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை யாதலால் எல்லோரும் இன்ஸ்பெக்டரின் உதவியை மெச்சினர்கள். இதற்குள் டாக்டர் கம்பத்தில் பிணைக்கப்பட்டிருந்த திலகவதியைக் கண்டார். எல்லோரும் அங்கு ஓடினர்கள். கட்டுண்டு துவண்டு வாடிய கொடி போல நிற்கும் திலகவதியைப் பார்த்த எத்தகைய மனம்தான் கருகி யுருகாது. முதலில் அத்துட்டர்களை ஓடவிடாமல் சுட்டு விட்டுத் திலகவதியைப் பார்க்க அம்புஜம் ஓடினள். இதற்குள் மேல்குறித்தபடி எல்லோரும் சேர்ந்துவிட்டார்கள். பிணைக்கப்பட்டிருக்கும் திலகவதியைப் பார்த்த சுகுமாரனின் தேகம் அனலினிடை மெழுகென உருகுகிறது. ஆனையைத் தோற்கடிக்கும் வண்ணம் கதறிக்கொண்டே தன் கையினலேயே திலகவதியின் வாயிலிருந்த துணியை எடுத்தான். கட்டுக்களை அம்புஜம், டாக்டர், சுகுமாரன் மூவருமாக கத்தியால் கயிற்றை அறுத்து அவிழ்த்தார்கள். திலகவதிக்கு மூச்சு மட்டுமிருக்கிறதே யன்றி மற்றபடி ஒன்றுமே இல்லை. கையைப் பின்புறம் கட்டியிருந்ததை அவிழ்த்துப் பார்க்கையில் கயிற்றினல் இருக்கிக் கட்டியிருந்த இடமெல்லாம் அப்படியே தழும்பு தழும்பாக எழும்பியும் சில விடத்தில் ரத்தம் பீறிட்டும் இருந்தது.

இந்த அலங்கோலத்தைக் கண்டு சற்றும் மனஞ் சகியாத சுகுமாரனின் உயிர் தத்தளிக்கிறது. தண்ணீரால் முகத்தைத் துடைத்து விசிறி கொண்டு விசிறினர்கள். இதற்குள் டாக்டர், "சுகுமாரா! நாங்கள் என்ன நினைத்தோம் எனில் இவ் விஷயம் உனக்குத் தெரிந்து உன்னைக் காலையில்தான் விடுதலைச் செய்வார்கள். அதற்

குள் உன் காதல் கனியை நன்ருகப் பழுத்த கனியாக்கி உன்னி டம் கொடுக்கலாம் என்று நினைத்தோம். இன்ஸ்பெக்டர் இடியாப் பம் இந்த நிமிஷிலேயே மாஜிஸ்டிரேட்டிடம் உண்மைகளை விளக்கி உன்னைக் கண்டால்தான் திலகவதியின் உயிர் இருக்கும். இல்லை யேல் அதற்கும் தாங்கள் ஜவாப்தாரி என்று கூறி விடுதலை யுத்தரவு வாங்கிக்கொண்டு, சிறைச்சாலை யதிகாரியிடம் காட்டி உன்னை யழைத்துக்கொண்டு வந்து விட்டாராம். உனக்கு வேண்டியது இப் பொருள். மற்றவற்றை நாயுடு பார்த்துக் கொள்வார். நீ, அம்பு ஜம், உன் தாயார் ஆகியோர்கள் என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து விடுங்கள். நான் தக்க சிகிச்சை செய்கிறேன். அவ்விடத்தில் சோமு பிழைப்பது துர்லபமே! என் அஸிஸ்டெண்டு டாக்டரை அங்கு வைத்து வந்தேன். நாயுடுகாரு! நான் சொல்வதென்ன ! சரி தானே!" என்ருர்.

அபாரமான அன்பு—காதல் வெள்ளம்—கரை புரண்டு ஓடு கையில் அதற்கு எதைப் போட்டால்தான் அணையாகும். வெட்க மென்பது அறவே மறைந்து விட்டது. சுகுமாரன் தன்னுருயிர்த் திலகத்தைத் தன் அபரிமிதமான அன்போடு தூக்கி பெரிய மோட் டார்காரில் தன் மடிமீதே படுக்க வைத்துக் கொண்டான். கூட டாக்டர், கோமளவல்லி, அம்புஜவல்லி ஆகியவர்களும் வண்டியில் அமர்ந்ததும், வண்டி ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றது.

நாயுடுகாரு இன்னும் மற்ற போலீஸ் அதிகாரிகள் உள்பட சுற்றி வளைத்துக்கொண்டு சுட்டுத் தள்ளப்பட்டவர்களை எல்லாம் இழுத்து ஒன்ருகப் போட்டார்கள். அங்கச்சியம்மாள் மூர்ச்சித்து பிரக்ஞையற்று அப்படியே கிடந்தவள் சிறிது நேரத்திற்கெல் லாம் கண்ணைத் திறந்தாள். அவளுடைய ப்ரலாபத்தைக் கூற வேண்டுமா! குடுகுடுப்பைக்காரனின் முன்னிலையில் சென்று சக்கார் சக்கார் என்று அடித்துக்கொண்டு "ஐயோ! அட பாவி ! படுபாவி ! நாசகாலா ! கொலை பாதகா ! என் குடியைக் கெடுத்த சண்டாளா! ஐயையோ! மயக்க மருந்து என்று கூறி விஷத்தைக் கொடுத்து என் குழந்தைகளைக் கொன்று விட்டாயே! நான் படு மோசம் போய்விட் டேனே! பணத்தையுங் கொட்டி உனக்கு என் குழந்தைகளையும்

பலி கொடுத்து விட்டேனே! என் வயிறு எரிகிறதே!'' என்று கதறினாள்.

நாயுடுகாரு "அம்மா! வீணுகக் கொள்ளிக்கட்டையால் தலை சொரிந்துகொண்டு தலை நெருப்புப் பிடித்து எரிகிறதே என்றால் இனி என்ன செய்ய முடியும்? ஒரு அனாதையை—தாயற்ற சிறுமியை—வதை செய்ததும், பதித்ரோகமும் வீண் போகுமா! உம்! இனிமேல் உங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வண்டி ஏறுங்கள். ஏ 103! இந்த அம்மாளையும் அச் சவங்களையும் வண்டியில் ஏற்றி அவர்களின் வீட்டிற்கே கொண்டுபோய் அவர்கள் எதுவும் தற்கொலை செய்துகொள்ளாமல் காவல் பார்த்துக்கொள்!'' என்றார்.

சேவகனும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் அங்கச்சியம்மாளையும் அவள் குழந்தைகளின் சவத்தையும் ஓர் வண்டியில் பலாத்காரமாக ஏற்றினார்கள். அங்கச்சியம்மாளுக்குத் தான் செய்த சதி முற்றும் நன்கு விளங்கி மனத்தில் சுருக்கு சுருக்கு என்று பொத்துகிறது. தான் இனி வீட்டிற்கு வரமாட்டேனென்றும் இப்படியே இறந்து விடப் போவதாயும் பெரிதும் வருந்தி மொண்டித்தனம் செய்தாள். அதற்கு இனிமேல் விடுபவர்கள் யார்?

இன்ஸ்:....தாயே! இந்த மானம், அவமானம் இரண்டும் இந்த நிமிடம் வரையில் எங்கே ஒளிந்து கொண்டிருந்தன? அப்போதே கொஞ்சமேனும் தங்கள் மனத்தில் இருக்குமாயின் உங்கள் மனப் பூர்வமாக மோசமாகக் கடனை வாங்கிவிட்டு அந்தப் பேதையின் தலையில் பாறையைப் புரட்டுவாயா! உன் மனந் துணிந்து பலி இடுவதற்குத் துணிவாயா! அன்னிய மனிதனுன சுகுமாரனைக் கைது செய்து அவன் தாயின் வயிறு கொதிக்கும்படிச் செய்வாயா! புருஷனை பறியாது திருடனுடன் சம்பந்தம் துணிகரமாகச் செய்வாயா! உன் குழந்தை இறந்த பிறகன்றோ இந்த வயிற்றெரிச்சல் உனக்குத் தெரிந்தது. கோமளவல்லியம்மாளின் மகன் தூக்கில் தொங்கலாடியோ, தீபாந்திர சிக்ஷை யடைந்தோ போயிருப்பின் அந்தம்மாளின் வயிறு எவ்விதம் பற்றி எரியும் என்பது இப்போது

உனக்குத் தெரிகிறதா! உன்னிடமே அடைக்கலமாக விருந்து அடிமை வேலை செய்யும் அனுதையினிடத்தில் இரக்கமற்று நீ செய்ய விருந்த சதிக்குக் கடவுள், நீ நம்பிய மாந்திரீகனின் கையி ஞலேயே விஷம் வாங்கிக் கொடுத்து உன் பிள்ளைகளையே பலி கொடுக்கச் செய்து உனக்குப் புத்தி கற்பித்தார். உம் ஏறு; இனி இந்த ஜபம் சாயாது'' என்று கூறிப் பலாத்காரமாக வண்டியில் ஏற்றினர்.

இம் மொழிகள் அங்கச்சியம்மாளின் செவியில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோல விருந்தன. தான் செய்த கொடிய பாபங்கள் எல்லாம் சினிமாப் படம்போல எதிரில் காட்சி கொடுத்து மிரட்டுகின்றன. வண்டியில் சவத்தோடு சவமாகப் படுத்து விட் டாள். வண்டியும் புறப்பட்டு விட்டது.

டெப்டி சூபரின்டென்டெண்டும், அஸிஸ்டெண்டு கமிஷனர், நாயுடு, இன்னும் மற்ற போலீஸாரும் அங்கு புதையல் வைத்திருக் கும் தவலையைப் பார்த்தார்கள். அதில் அனேக ஜதை ஜதையான நகைகளும், தங்கத்தை யுருக்கிய பாளமும் காணப்பட்டன. அவை களை எடுத்துப் பரிசோதிக்கையில், அனேக நாட்களாக 'அங்கு திருடு போய்விட்டது. இங்கு திருடு போய்விட்டது'. என்று போலீ ஸில் பிராது கொடுத்திருந்த அடையாளமுள்ள நகைகள் அனேகம் அதில் காணப்பட்டது கண்டு ஆச்சரிய முற்றூர்கள். இவ்விதம் களவாடிய சொத்துக்களை வைத்துக்கொண்டு தாங்கள் யோக்யர் போல நடித்துப் புதையல் எடுத்துத் தருவதாய்க் கூறி அங்கும் பெருங் கொள்ளை யடித்து இக் கூட்டம் பிழைப்பதை யறிந் தார்கள். பிறகு முக மூடிகளை எடுத்து ஆசாமிகளைக் கவனித்ததில் சில மாதங்களுக்கு முன்பு சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டதாகத் தகவலும், இவர்களின் புகைப்படமும் ஏற்கெனவே போலீஸாரிட மிருப்பதால் நன்ருக இவர்கள்தான் என்று தெரிந்துவிட்டது. உடனே எல்லோருக்கும் விலங்கை மாட்டினர்கள்.

குடுகுடுப்பைக்காரனை உற்றுக் கவனித்தார்கள். அவன் ஒரு கொலை செய்ததற்காக 20 வருடம் காவல் தண்டனை படைந்திருந்

தான். அங்கிருந்த வார்டரை நன்றாக அடித்துக் கொன்றுவிட்டு அவ்விடத்திலிருந்து எப்படியோ அஸகாய சூரமாகத் தப்பித்துக் கொண்ட கைதி என்று தெரிந்தது. இவர்களை எல்லாம் ஓர் லாரி யில் ஏற்றினார்கள்; இந்த மனிதர்களும் புழுபோலாய்விட்டார்கள், வாயே செத்துவிட்டது.

அங்குள்ள மற்ற சாமான்களையும், புதையல் பொருள்களையும் ஓர் வண்டியிலேற்றி போலீஸ் பந்தோபஸ்துடன் அனுப்பிவிட்டு எல் லோரையும் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் லாக்கப்பு செய்து விட்டு அங்கச்சியம்மாளின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்குள்ள அலங்கோலத்தைக் கேட்கவேண்டுமா! மறு நாள் காலை 8 மணி வரை யில் மயக்கம் தெளியாமலிருக்கும்படி பவுடரைக் கொடுத்திருப்ப தால் எத்தனை மாற்று மருந்துகள் கொடுத்தும் சோமுவுக்கும் கண பதிக்கும் தெளிவு உண்டாகவில்லை.

இவர்களுடைய சவக்கோலத்தைக் கண்ட அங்கச்சியம்மா ளின் இன்னொரு பாதி உயிரும் நீங்கிவிட்டது. தணல்மீது நிற்பவள் போலத் தத்தளிக்கின்றாள். "குழந்தைகளைப் பறி கொடுத்ததுபோல இவர்களையும் கொடுத்துவிட்டோமா என்ன!" என்று நடுக்கலுற்று விட்டது; அவர்கள் மயக்கந் தெளிந்து எழுந்தால் அவர்களின் முகத்தில் தான் எவ்விதம் விழிப்பது என்ற அபாரமான லஜ்ஜையும் விசனமும் ஒன்று கூடி வதைத்துக் கொல்லுகின்றன; என்ன செய் வாள் பாவம்? ஒன்றுமே தோன்றாதவளாய்க் கல்லாய்ச் சமைந்துவிட் டாள்.

17-வது அதிகாரம்

மகிழ்ச்சி உதயம்—மங்கள இதயம்

“நாயுடுகாரு, இன்ஸ்பெக்டர் இடியப்பத்துடன் “ஏன் சார்! சுகுமாரனை நான் காலையில் விடுதலை செய்யலாம். அதற்குள் திலகவதியின் நிலைமை சற்று தெளிவு உண்டாகும்; பிறகு அவன் பார்த்தால் கவலைப்படமாட்டான் என்று எண்ணினேன்: நீர் எதற்கு இப்போதே அழைத்து வந்துவிட்டீர்?” என்று கேட்டார்.

இடியா:—ஐயா! தங்களிடம் எதிர் நின்று கூடப் பேச சக்தியற்ற நான் என்ன பதில் சொல்லுவேன்? நான் உண்மையில் சுகுமாரன் குற்றவாளி என்றெண்ணி அவனைக் கைது செய்துவிட்டேன். திலகவதியை மந்திரக்காரனிடம் காட்டிக்கொடுத்து அனுப்பியதுமல்லாமல் திலகவதியின் கைப்பட மந்திரக்காரனை விட்டு பயமுறுத்தி திலகவதியைக் கடிதமெழுதச் செய்து வாங்கி அந்தப் பாவி அங்கச்சி எனக்குக் காட்டியதால் நான் முற்றிலும் ஏமாந்துவிட்டேன். தங்களைப்போல தீர்க்க யோசனையும், ஆராய்ச்சித் தன்மையும், பொறுமையும் இல்லாமையினால் ஆத்திரப்பட்டுவிட்டேன். அந்த கடிதம் பலாத்காரமாக வாங்கப்பட்டது என்று இப்போதுதான் அங்கச்சியம்மாள் வீட்டைச் சோதித்ததில் அதற்கு ஓர் கடிதம் ஆதாரமாகக் கிடைத்தது; அதுவரையில் நான் முட்டாளாகவே நினைத்திருந்தேன்.

மேலும் சுகுமாரனைக் கைதியாக்கு முன்னர், அவனையே குற்றவாளியாக்க எண்ணி ஆத்திரத்தோடு கைதியாக்கிவிட்டேன். பிறகு நான் அடிக்கடி ஜெயிலுக்குப் போக நேர்ந்தது. அக்காலையில் எல்லாம் சுகுமாரன் கண்ணீர் விட்டுக் காதலியை எண்ணிக் கதறுவான் பாருங்கள்; என்னாலேயே சகிக்கமுடியாது போயிற்று. அவனோடு இருப்பவர்களும், ஜெயில் வார்டர், அதிகாரிகள் முதலிய எல்

லோரும் அவனுடைய உண்மையான காதலை மெச்சியும், அவன் அவஸ்தையைக் கண்டு விசனித்தும் சொல்லுவார்கள்: தனக்குத் தானே பித்தன்போலப் பிதற்றுவான். "ஹா! திலகம்! திலகவதி! என் கண்ணே! என்னை மறந்துவிட்டாயா! ஏ மோசக்கார அங்கச்சி! அடி பாவி! நீ என் மனத்தைத் தத்தளிக்கச் செய்வதும் அப்பேதைப் பெண்ணைக் கொலை செய்வதும் வீண்போகாது. கடவுள் என் பங்கி லிருந்து உன்னை பழிக்குப் பழி வாங்காது விடப்போவதில்லை.

ஈசா! என் கண்மணியை எனக்களிப்பாயா! அவளிருப்பி டத்தைக் கனவிலாவது தெரிவிக்க மாட்டாயா! என் திலகவதி உயி ரோடிருக்கிறாளா வென்பதுகூடத் தெரியவில்லையே! ஹா! கண்ணே! என் காதல் கனியே!" என்று அலறுவான். இவைகளை நேரில் பார்க் கும்போதெல்லாம் என் மனம் தத்தளிக்கும். அவனே திலகவதியை ஒளித்திருப்பவனாயின் இவ்விதம் துடிப்பானா! இதில் ஏதோ மோச மிருக்கிறது என்று நினைத்தேன். நான் நினைத்து என்ன செய்வது? நான் முதலில் அவசரப்பட்டு விட்டதை எண்ணி வருந்தினேன். இப்போது இந்த தகவல்கள் முற்றும் வெளியாகி விட்டதால் சுகு மாரனின் தத்தளிப்பு நீங்கி அவன் உடனே சந்தோஷமடைய எண்ணி, அப்போதே இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அழைத்துக் கொண்டு வந்து அங்கச்சியம்மாள், குடு குடுப்பைக்காரன் முதலி யோரின் பவிஷை அவனே நேரில் பார்க்கட்டும் என்று அழைத்து வந்தேன்; அவன் திலகவதியைக் கண்ட உடனே பொங்கி எழும் ஆநந்தமும் துக்கமும் கூடிய நிலைமையில் அவளைத் தூக்கி வண்டி யில் விட்ட காக்ஷி என் மனத்தை யுருக்கியது. காதலென்றால் இது வன்றோ காதல். காதல் கனிந்த கனி இது." என்று அபாரமாய்க் கூறினார்.

நாயுடு:—இன்ஸ்பெக்டரவாள்! ஏது தங்களுக்குக்கூட காதல் விஷயத்தில் இவ்வளவு கருணை ஏற்பட்டிருக்கிறது! அவ் விஷயத்தில் அனுபவம் உண்டோ! அல்லது என்னைப்போல பல விடத்திலும் குட்டுப்பட்ட அனுபவம்தானா?

இன்ஸ்:—அதைக் கூற வேண்டுமோ! நான் தங்களைப்போன்ற அனுபவசாலி யாவதற்கு இன்னும் பாக்யம் பெறவில்லை. என்

சொந்த அனுபவமானதைக் கொண்டே மனது இளகி விட்டது. நான் இக் காதல் விஷயத்தில் பட்ட துன்பங்கள், படும் துன்பங்கள் கூறத் திறமன்று. அவை எதற்கு? என்னுசைக் கிளி என்னை மோசஞ் செய்துவிட்டு எமனுலகம் சென்று விட்டது. எனக்கு வழி கிடைக்காமையினுல் தடுமாறிக் கொண்டு என் காலத்தைத் தள்ளுகிறேன். பறி கொடுத்த என் நெஞ்சமே பதறித் தவிக்கையில், உயிரோடு வைத்துக்கொண்டு மோசக்காரர்களின் மோச வலையில் கட்டுண்டு தவிக்கும் அவர்களின் மனப்புண்ணைக் கேட்கவேண்டுமா! அதனுல்தான் திலகவதியின் கட்டை யவிழ்க்கவே அவனைக் கொண்டுவந்து விட்டேன். ஏன் இதில் என்ன குற்றம்?

நாயுடு:—குற்றம் ஒன்றுமில்லை. அவன் நிலைமை கேவலமாகி விட்டதே! திலகவதிக்கு நன்ருகத் தெளியும் வரையில் அவன் துடிதுடிப்பான். எப்படியோ ஒன்று. காரியம் ஜெயமாகிவிட்டது. நாம் ஆஸ்பத்திரிக்குப் போவோம்—என்று கூறிக்கொண்டே எல்லோரும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள்.

திலகவதிக்குத் தக்க சிகிச்சைகளைச் செய்து அவளை திறந்த வெளியான இடத்தில் சந்திர கிரணங்கள் மேலே படும்படியாக ஒரு கட்டிலின்மீது படுக்க வைத்துவிட்டார்கள். கட்டிலின் இரு புறமும் நாற்காலிகளில் சுகுமாரன் ஒரு புறமும், கோமளவல்லியம்மாள் ஒரு புறமும் உட்கார்ந்து திலகவதி கண் திறக்கும் நேரத்தையே எதிர் பார்த்திருந்தார்கள்.

ஆகாயத்தில் சந்திரிகை வெகு ரமணீயமாய்ப் ப்ரகாசிக்கின்றது. நக்ஷத்திரக் கூட்டங்கள் எண்ணிறந்து கூடி இருக்கின்றன. திலகவதியைக் கண்டு விண்மீன்களும், மதி மன்னனும் வெகு சந்தோஷத்துடன் தங்கள் குளிர்ந்த கிரணத்தை அவள்மீது அள்ளி வீசி அவளைக் களை தெளிந்து எழுந்திருக்கச் செய்வதேபோலத் தோன்றியது. சுகுமாரன் அவள் மீது வைத்த விழியை வாங்காமல் முகத்தைச் சிறிது நேரத்திற் கொரு தரம் தடவிக் கொடுத்துக் கொண்டே "கண்மணீ! திலகவதீ! இதோ பார். என்னைக் கண் திறந்து பார். என் கவலையைத் தீரு! என் தாயாரின் குரல் உனக்குத் தெரியவில்லையா?

என் இன்ப மனோகரீ! இணையில்லா மாணிக்கமே!'' என்று பரிதாப கரமாக கெஞ்சிக்கொண்டு கண்ணீர் வழிய "ஓய் டாக்டர்! எப் போது தெளியும்? இன்னுமா உமது மருந்து வேலை செய்யவில்லை? இன்னும் ஏதேனும் மருந்தோ, இஞ்செக்ஷனோ கொடுங்கய்யா!'' என்கிறான்.

இம்மாதிரி கேட்பது உலகத்தில் பெரும்பாலும் சகஜமே! தங்கள் மன வேகத்திற்கு முன்பு வைத்தியரின் செய்கை மங்கிவிடுவ தாக எண்ணிவிடுகிறார்கள். ஏன்! படுத்திருக்கும் மனிதர்களின்மீது நாம் கொண்டுள்ள அன்பின் பெருக்கு அப்படி இருக்கிறது. எந்த மருந்தையேனும் கொடுத்து அவர்களின் நோயைத் தீர்த்துவிட்டால் போதும் என்கிற பெரு உணர்ச்சியினால் அவ்வாறு வைத்தியர்மீது கோபிக்கச் செய்கிறது.

இந்த நிலைமையில் இளவலின் மனத் துடிப்பைக் கூறவேண் டுமா! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் தவிக்கிறான். அச்சமயம் நாயுடு வந்து சேர்ந்தார். டாக்டரிடம் தனித்து விசாரித் ததில் திலகவதிக்குப் பிராண பயம் எதுவும் நேராது என்று தெரிந்து கொண்டார். சுகுமாரனின் உண்மையான காதலின் வன்மையைப் பற்றிக் கொண்டாடிப் பேசி "சுகுமாரா! வீணாக பயப்படாதே; அவ ளுடைய மனம் இருந்த நிலைமையை அவள் கூறாமல் நாமே தெரிந்து கொள்ளலாம். அத்தனை வேதனையுற்று வாடி வதங்கித் தத்தளித்து அளிந்த புண்ணாயிருந்த நிலைமையில் மூர்ச்சையாவது சகஜம். நீயும் சற்று ஓய்வு எடுத்துக்கொள். நான் அங்கச்சி வீட்டிற்குச் சென்று வருகிறேன். நீங்கள் வீணாக உடம்பை அலட்டிக் கொள் ளாது படுத்துக்கொள்ளுங்கள்'' என்று நாயுடு கூறினார். அவைகள் சுகுமாரனிடம் பலிக்கவில்லை.

நாயுடு அவர்களுக்குத் தேறுதல் கூறிப் பின்னர் அங் கச்சியம்மாளின் வீட்டிற்குச் சென்றார். அங்கு டாக்டர் சோமுவின் தேக நிலைமையைக் கண்டு வருந்திக்கொண்டே "அம்மா! இவருக்கு நீங்கள் கொடுத்த மயக்க மருந்து எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டார். அங்கச்சியம்மாளின் உயிர் ஊஞ்சலாடிக்கொண்

டிருக்கிறது: அங்கச்சியம்மாள் அப்பொழுது மருந்து கொடுக்கும் அவசரத்தில் அந்தப் பொட்டணத்தில் கொஞ்சம் மிகுதி யிருந்த தோடு அதை யப்படியே ஒரு மேஜைமீது போட்டுவிட்டாள். அந்த பொட்டணம் டாக்டரின் கையில் கிடைத்துவிட்டது. அம்மருந்து ஏதோ ஒரு அளவுக்கு மீறினல் ஆளைக் கொன்றுவிடும். இது சிறு குழந்தைகளுக்கு அடியோடு வாசனை பட்டாலும் அவை இறந்து விடும். இத்தகைய விஷம் யார் கொடுத்தார்கள்?" என்று டாக்டர் யோசித்தபடியே அங்கச்சியம்மாளைக் கூப்பிட்டார்.

அங்கச்சியம்மாள் புருஷனின் தேகமெல்லாம் தடவிப் பார்த் தாள், சோமுவினிடம் வந்தாள். அதே சமயம் டாக்டர் மேற் குறித்த கேள்வியைக் கேட்டார். அங்கச்சி அலறியடித்துக்கொண்டு "ஐயா! இவனுக்கு எப்போது தெளிவு உண்டாகும்? ஐயா! அளவைக் கூறவேண்டுமா! என் கை நடுங்குகிறதே! இரண்டு மூன்று சிட்டி கைகளுக்கு மேலிருக்கும். அதிக நேரம் தெளியாமலிருக்கவேண்டு மென்று வெகு அவசரமாகச் சீக்கிரமே கொடுத்துவிட்டேன்" என்றாள்.

டாக்ட்:—என்ன! என்ன! இரண்டு மூன்று சிட்டிகைகளுக்கு மேலிருக்குமா! ஐயையோ! மோசம்! மோசம்! அதனால்தான் நான் எத்தனை சிகிச்சை செய்தும் பலனில்லை. இனி பிழைப்பது துர்லபந் தான் அவருக்கு எவ்வளவு கொடுத்தீர்கள்?

அங்க:—ஆ! பிழைப்பது துர்லபமா! ஐயோ! விஷத்தையா அப் பாவி சண்டாளன் கொடுத்தான்! ஹா! நான் என்ன செய்வேன்! அவருக்கும் இரண்டு சிட்டிகைகள் இருக்குமே! ஐயா டாக்டர்! என் தீய எண்ணத்தின் கொடுமை என்னை யடியோடு அழித்துக் கைமேல் பலனைக் காட்டிவிட்டது. இனிமேல் நான் திலகவதியின் முகத்திலோ, என் பர்த்தாவின் முகத்திலோ விழிக்க யோக்யதை யற்றுவிட்டேன்: என்னுயிரை இனி தரிக்கக்கூடாது. இனி வாழ்வது வெட்கத்திலும் வெட்கம். இனி என் காலம் முற்றும் சிறைச்சாலையில் தான் என்பது எனக்கு விளங்கிவிட்டது. இனிமேல் நான் அவ்வாறு நடைப்பிணமாக வாழ்வதைவிட என்னையும் எமனுலகத்திற்குச்

சேர்த்துவிடுவது மேலானது. தாங்கள் என்மீது கருணை கூர்ந்து எனக்கோர் விஷம் கொடுத்து விடுங்கள். இல்லையேல் நான் குளத்திலேனும் கிணற்றிலேனும் விழுந்துவிடுகிறேன். என்னை விட்டுவிடுங்கள்." என்று கூறிக்கொண்டே ஓடத் தலைப்பட்டாள்.

அத்தருணமே நாயுடு அங்கு வந்தார். அவர் "ஆகா! ஏன் ஓட வேண்டும்? தாங்கள் மருந்து கொடுத்து தங்கள் குழந்தைகளையே ஊருக் கனுப்பியதுபோல நாங்களும் அந்த புண்ணியமான காரியத்தைச் செய்ய வேண்டுமா! சிறைச்சாலையே இல்லாமல் வீடாக விருக்கையிலேயே தாங்கள் வீட்டைச் சிறைச்சாலை போலும் தாங்கள் சிறை யதிகாரி போலும் திலகவதியை நடத்திய அருமையைத் தாங்களும் அனுபவித்து ஆநந்த மடைய வேண்டாமா! அதை விட்டு விட்டு இனி தாங்கள் இறப்பதாவது? அதிலும் போலீஸாரின் கையில் அகப்பட்ட பிறகு இந்த யோசனை ஏன்? இது இனி பலிக்காது. தாங்கள் இன்னும் என்னென்ன லீலைகள் செய்திருக்கிறீர்கள் என்பதைக் கூறி விடுங்கள்." என்றூர்.

இரு போலீஸார் அங்கச்சியம்மாளைச் சிறையிலிடுவதைப் போல ஒரு அறையில் போட்டுப் பூட்டிக் காவலிருக்க வாரம்பித்தார்கள். சோமுவுக்கு அவனை யறியாதவாறே பலமாக இரண்டு தரம் வாந்தியாயிற்று. அந்த மருந்து அவனுடைய ரத்தத்தில் கலந்து விட்டதாகையினல் இனி உபயோகமில்லை என்று கைவிடப் பட்டுவிட்டது. அவன் விடியற்காலைக்குள் வாய் திறந்து ஒரு பேச்சும் கூருமல் அப்படியே சவமாகி விட்டான். அவன் கதியும் முடிந்து விட்டது.

கணபதிக்கு வைத்தியர் செய்த பலமான சிகிச்சையினலும் அவனுக்கு மருந்து அளவுக்குக் குறைவாக விருந்ததாகையினலும் விடியற்காலம் 4 மணிக்கு அவன் சற்று கண்ணைத் திறந்தான். சரியானபடி மயக்கம் தெளிந்து பேசுவதற்குள் நன்ருக விடிந்து விட்டது. வீட்டில் போலீஸ்காரர்களும், நாயுடு முதலியோரும் இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். விவரம் ஒன்றுமே யறியானுகையினல் "என்ன! என்ன சமாச்சாரம்! எல்லோரும் இங்கு எதற்காக

வந்திருக்கிறீர்கள்? டாக்டர் எதற்காக வந்தார்? திலகவதி அகப் பட்டாளா! ஏதேனும் தகவல் கிடைத்து விட்டதா!'' என்று கேட் டுக்கொண்டே எழுந்து நடந்து வந்தார்.

மயக்கத்தின் சோர்வால் கால்கள் தள்ளாடுகின்றன. அப் போது தனது இரு குழந்தைகளும் சவமாகக் கிடக்கின்ற கோரத் தையும், சோமுவின் சவத்தையும் ஒருங்கே கண்டு "ஹா! என் குழந்தைகள் இறந்து விட்டனவா! ஐயோ! எப்போது இறந்துவிட் டன. அங்கச்சி எங்கே?'' என்று கர்ஜித்தவாறு குழந்தைகளின் மேல் விழுந்து கதறினர்.

நாயுடுவும், வைத்தியரும் அவரைத் தேற்றி நடந்த சகல விருத்தாந்தங்களையும் கூறி அங்கச்சியையும் காட்டினார்கள். இவை களைக் கேட்ட கணபதியின் நிலைமை எவ்விதமிருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்தறிதலே நலம். தன் துக்கம் தீர முட்டிக்கொண் டார். திலகவதியின்பால் காட்டிய கொடுமைக்கும், பலி யிடும் எண் ணத்திற்கும் அவள் தன் கைகளாலேயே மூன்று பலிகள் கொடுத்து விட்டாளே! ஐயையோ! இத்தனை நாட்களாக புதையல் விஷயமாக இவள் செய்த வேலை எனக்கு ஒரு சிறிதும் தெரிய வராதே! குடு குடுப்பைக்காரனின் நேசங்கொண்டு புதையல் ஆசையின் பயனாக என் குடும்பத்தையே அதோகதியாக்கிவிட்டாளே! என் மானமே போயிற்றே! ஹா! திலகவதீ! என் செல்வங்களே! என் கண்மணி களே! திலகவதி எங்கே! ஆஸ்பத்திரியிலா இருக்கிறாள். என் திலகத்தை நான் முதலில் பார்க்க வேண்டும். ஆ! அந்தப் பாதகியை இனி இவ் வீட்டில் வைக்கவேண்டாம். ஸ்டேஷனுக்கே கொண்டு போங்கள். அச்சண்டாளியின் முகத்தில் நான் விழிக்கமாட்டேன். திலகவதி விஷயத்தில் அவள் செய்த அநியாயத்தை எல்லாம் நான் சகித்துக்கொண்டு இப்பாவியை ஊராருக்குப் பயந்து வீட்டில் வைத் திருந்தேன்; துஷ்ட மிருகத்தை—விஷ ஜெந்துவை—விடக்கேவல மாக விருக்கும். இக் கொலைப் பாதகியின் சம்பந்தம் போதும். எங்கே என் திலகம்? என் புத்திக் குறைவினால்—முட்டாள் தனத்தினால்— நான் அப்போது அந்த கள்ளக் கையொப்பக் கேஸை வெளியிட் டேன். அதை வெளியிடாதிருப்பின் இத்தனை கஷ்டம் வந்திராது

இந்த சண்டாளிதான் அதைச் செய்திருப்பாள் என்ற திட நம்பிக்கை முதலில் இல்லாது போய்விட்டது. பின்னர் உதித்தது; என் செய்வேன்?" என்று கூறுவதற்குள், நாயுடு கணபதியை நோக்கி "ஐயா! அந்த கையொப்ப விஷயத்தில் குற்றவாளி நீங்களே தான்." என்றதும் கணபதி "என்ன! என்ன! நானே குற்றவாளியா! ஐயோ! இதென்ன அநியாயம்!" என்றார்.

நாயுடு நகைத்துக்கொண்டே விஷயங்களை அம்புஜத்தினிடம் கூறியதுபோல ஆதியோடந்தமாகக் கூறியதோடு அவ்வாறு எழுதி இருந்த கடிதங்களை எல்லாம் பொறுக்கிக் காட்டினார். அங்கச்சியம்மாளின் பெட்டியிலிருந்து அவ்வித கடிதங்கள் இன்னும் எடுத்து சோதனை செய்துக் காட்டினார். அவ்வாறு சோதிக்கையில் குடுகுடுப்பாண்டிக்கும் அங்கச்சியம்மாளுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தின் காப்பிகள் அனேகம் கிடைத்துவிட்டன.

இவைகளை எல்லாம் கண்ட கணபதி திடுக்கிட்டார்: தான் ஓர் விளையாட்டாக எழுதிய கையொப்பம் இவ்வளவு தூரத்திற்குச் செய்துவிட்டதா! என்று வியப்பும் திகைப்பும் அபாரமான மன அதிர்ச்சியும் அடைந்துவிட்டான். அதற்குமேல் என்ன செய்வான் பாவம்! என்னை யறியாது செய்த காரியமும், என் மனைவியின் துற்புத்தியும் இரு காதலர்களின் உயிரை வாட்டிவிட்டனவே!" என்று வருந்தினன்.

இதற்குள் மணி ஏழு ஆகிவிட்டது. இச்செய்தி காற்றுப்போல ஊர் முற்றும் பரவிவிட்டது. கூட்டங் கூட்டமாக ஜனங்கள் இந்த வீட்டு வீதியில் கூடிவிட்டார்கள். கணபதியின் சிநேகிதர்கள் துக்கம் விசாரிக்க வந்துக் குழுமிவிட்டார்கள், இந்த அவமானம் தாங்காது அங்கச்சியின் உயிர் தத்தளிக்கிறது. கணபதியின் மானமே போகிறது. பிறகு என்ன நடந்ததென்று கூறவேண்டுமா! போலீஸாரின் தோரணைப்படிக்கு அங்கச்சியை ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள். மற்ற காரியங்களும் சட்டப்படி நடக்கத் தொடங்கின. அங்கச்சி வீதியில் வந்து வண்டியில் ஏறிப் போவதற்குள் வீதியிலுள்ள ஜனங்கள், "சீச்சீ! மானங்கெட்டவளே! தாயில்லாப் பெண்

ளைச் செய்த வதை இதுதான், தூத்தூ; உம் மூஞ்சியிலே காரி உமிய!'' என்று வசைமாரி பொழிந்து வயிறெரிந்தார்கள்.

* * * *

காலை 8 மணி சமாருக்கு திலகவதிக்கு ப்ரக்ஞை வந்தது. அப்போதும் தன்னை பலி கொடுக்கத் தயாராக்கி இருக்கும் எண்ணமே இருப்பதால் கையைக் கட்டியிருப்பதாகவே எண்ணி ஆட்டினாள். கட்டு காணாமையினால் உடம்பையும் பார்த்தாள். அவ்வாறு தடவிப் பார்க்கையில் "என் கண்மணி! கண் திறந்தாயா! என் கலி தீர்த்தாயா!'' என்று அம்ருத தாரைகளை ஊற்றுவதுபோலச் சுகுமாரன் திலகவதியைத் தடவியபடியே கேட்ட வார்த்தைகள் அவள் காதில் பட்டதுதான் தாமதம். ஷாக்கு அடிக்கப்பெற்றவள்போலத் துள்ளினாள். தன்னருகிலேயே தன் காதலன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு தன்னையே மறந்தாள்; வெட்கத்தைத் துறந்தாள்; தன்னிரு கரங்களினாலும் சுகுமாரனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "ஹா! ப்ராணநாதா! ப்ராணநாதா! இனி என்னுயிர் நீங்கினும் நிம்மதி யடைவேன்; என் கலி தீர்ந்தேன்! கவலை யொழிந்தேன்! என் பிழைகளை மன்னிக்கவேண்டும். பேதை என்னை க்ஷமிக்கவேண்டும்'' என்று கூறிக்கொண்டே சுகுமாரனைத் தண்ணீரால் நீராட்டி அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டாள்.

சுகுமாரன் உலகையே மறந்தான். தான் தற்போது இருப்பது சொர்க்கமென்றே கருதிவிட்டான். "என் காதல் கனியே! நமது காதல் விருக்ஷத்தில் காய்த்த காயைக் கனியாக விடாமல் அப்படியே திருகிவிடுவதற்கு வஞ்சகப் பறவைகள் அனேகம் அதைச் சுற்றியமர்ந்து தம்மாலான வரையில் பிரயத்தனம் செய்தன. ஆனால் கடவுள் ஒருவர் இல்லையா! அவர் தனது மாயா விலாச மகிமையால் அக்காயை எதுவும் தீண்ட விடாமல் வேலி போட்டுக் காத்து அதைக் கனியாக்கி இப்போதே நம்மிருவருக்கும் புசிக்கும்படி யளித்தார். கண்மணீ! நம்பியவர்களை வெம்பிடச் செய்யான் அந்த அம்புயம் கண்ணன். நீ இனி கவலைப்படாதே! மலைபோல வந்த வினை பனிபோல நீங்கியது. இதோ என் தாயார் உன் விழிப்பைக்கோரி அல்லும் பகலும் காத்திருக்கிறாள்.'' என்று கூறினான்.

ஆநந்த சாகரத்தில் அகமழ்ந்திருக்கும் திலகவதி மதுவுண்டு களித்த வண்டுபோல மதி மயங்கி, கொடியாகிய தனக்குச் சுற்றிக் கொள்ள விருக்ஷமகப்பட்டதுபோலச் சுகுமாரனைத் தழுவியபடியே சில நிமிடங்கள் சேர்ந்து உணர்வற்றாள். இந்த அபாரமான ஆநந்தக் காட்சியைக் காண்பதற்கே இரவு பகல் ஏங்கித் தவித்த கோமளவல்லியம்மாளின் குதூகலத்தை—அளப்பரிய மகிழ்ச்சியைக்—கூற வேண்டுமா! வெகுகாலந் தவம் செய்த பக்தர்களுக்குக் கடவுளின் தரிசனம் கிடைத்த மாத்திரத்தில் எந்த விதமான ஆநந்தத்தை யடைவார்களோ, அதற்குமேல் ஆயிரம் பங்கான ஆநந்தத்தைக் கோமளவல்லியம்மாள் அடைந்தாள். சாக்ஷாத் பார்வதியும், பரம சிவனும், லக்ஷ்மியும் நாராயணனும், வாணியும் பிரம்மனும் ஒன்றாகக் காட்சி கொடுப்பதாகக் கோமளவல்லி நினைத்துப் பேராநந்தக் கண்ணீர் பெருக வீற்றிருந்தாள். இவ்விதம் தன் மகனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டது இன்றே நிறைவேறிற்று.

சுகுமாரன் கூறிய மொழிகள் திலகவதியின் செவியில் முற்றும் விழவில்லை. கடைசியாக அவன் தன் தாயாரைப்பற்றிக் கூறியதும் திலகவதிக்குச் சற்று லஜ்ஜை யுண்டாகியது. சுகுமாரனை விட்டுக் கோமளவல்லி யம்மாளின் காலைப் பிடித்துக்கொண்டு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி "மாமீ! என் குற்றங்களை எல்லாம் மன்னிக்க வேண்டும். என் கண்மணி மாதவன் எங்கே! அவன் வரவில்லையா!....இப்போது நாம் வீட்டில்தானே இருக்கிறோம்;... இல்லை...காட்டில்...இல்லை...வேறு எங்கே இருக்கிறோம்? எங்க மாமி எங்கே!... என்று திரள மருளாகக் கூறி விழித்தாள்.

கோமளவல்லி திலகவதியைத் தூக்கி மார்போடணைத்துக் கொண்டு இரு கன்னங்களிலும் முத்தமிட்டு, உச்சி முகந்து "என் செல்வச் சிமாட்டியே! என் கலி தீர்க்க வந்த கற்பகத் தருவே! உன்னால் என் மனக் குறை எல்லாம் அகன்று விட்டது. உன்னால் என் குல விளக்கு ப்ரகாசித்தது. கவலைப்படாதே! பாவி அங்கச்சியால்தான் இத்தனை தூரம் வந்தது வினை." என்றாள்.

அதே சமயம் நாயுடு, டாக்டர், கணபதி முதலியவர்கள் வந்தார்கள். கணபதியைக் கண்டதும் திலகவதி "ஹா! மாமா!" என்று காலில் விழுந்தாள். கணபதிக்குப் பேசவே முடியவில்லை. தொண்டையை அடைக்கின்றது. திலகத்தைத் தூக்கி நிற்கச் செய்து, தேம்பித்தேம்பி யழுதான். திலகவதிக்கு அப்போதேதான் சாவியின் நினைவு உண்டாகியது. அதை உடனே எடுத்து "மாமா! நான் என் பிறப்பு விஷயத்தை எத்தனை தரம் கேட்டும் கூறவில்லையே! அதன் ரகஸியத்தை நான் அறிந்துவிட்டேன். துப்பறியும் நாயுடு காரு எங்கே! அவரைப் பார்க்கவேண்டும். நாதா! இதோ! இதை அவரிடம் கொடுங்கள். என் மாதா பிதாவைக் கொலை செய்த த்ரோகியைக் கண்டுபிடித்து பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் ஆத்திரம் அடங்காது. என் ரத்தங் கொதிக்கின்றது" என்று கூறிக்கொண்டே சாவியைக் கழற்றி அதனுள்ளிருந்த கடிதத்தை சுகுமாரனிடம் கொடுத்து, அதைத் தான் கண்ட விருத்தாந்தங்களை விடாமல் கூறியதோடு தன்னை முதல் முதல் வீட்டிலிருந்து மெஸ்மரிஸம் செய்து அழைத்துச் சென்றது முதல் கடைசியில் வண்ணான் என்று தன்னை மந்திரவாதியே ஏமாற்றித் தன்னிருப்பிடம் கொண்டு போய்ப் பலி கொடுக்கக் கால் கைகளைக் கட்டி நிற்க வைத்த விஷயம் வரையில் கூறி முடித்தாள்.

எல்லோரும் இந்த விவரங்களைக் கேட்டு அதி யாச்சரியமடைந்தார்கள். சுகுமாரன் நாயுடுவைக் காட்டி "திலகவதி! இவர் தான் நாயுடுகாரு! இவரால்தான் நமக்குற்ற துன்பங்கள் அகன்றன. அதனால் இவரே தற்போது தெய்வமாக நாம் கொண்டாடவேண்டியவர்." என்றான். உடனே திலகவதி அவர் காலில் விழுந்து வணங்கி, "ஐயா! இத்தனை செய்தது மாத்திரம் போதாது. என் பெற்றோரை அனியாயமாகக் கொலை செய்த பாதகனைக் கண்டு பிடித்துப் பழி வாங்கிக் களிக்கவேண்டும். இந்த உதவியைத் தாங்கள் செய்துத்தான் ஆகவேண்டும். இதைப் படித்துப் பாருங்கள். விவரம் தெரியும்." என்றாள்.

உடனே நாயுடு அக்கடிதத்தை உரக்கப் படித்தார். போலீஸார் உட்பட எல்லோரும் இதைக் கேட்டுப் பேராச்சரியமடைந்து

கிழவியின் திறமையை மெச்சினார்கள். நாயுடு அபாரமான சந்தோஷத்துடன், "அம்மா! திலகவதி! உன் மனங் களிக்கும் வண்ணம் நீ பழிக்குப் பழி வாங்கலாம். உன் கடிதத்தைப் பார்க்கு முன்னரே நான் பேர்வழியைக் கண்டு பிடித்து அவன் செய்த பல குற்றங்களை விளக்கிவிட்டேன்! இதைப் பார்த்தவுடனே இன்னும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அங்கு அவன் கொலை செய்த தகவல் அவன் பெட்டியையும் அதில் சம்பந்தப்பட்டவர்களையும் சோதனை போட்டதில் தெரிந்து விட்டது. ஆனால் அவர்கள் உன் மாதா, பிதாதான் என்பது விளங்கவில்லை. முருகேசன், வேதவல்லி என்ற பெயர் உள்ளவர்களை அப் பாதகன் கொலை செய்து, பெருமையுடன் அவன் சகலபாடிக்கு எழுதிய கடிதத்தையும் போலீஸில் தாக்கல் செய்திருக்கிறேன்.

திலகவதி! உலகநாதன் என்ற ஒரு பெயர் மாத்திரம் அவனுக்கில்லை. அவன் பல பெயர்களோடு பலவித காரியங்கள் செய்திருக்கிறான். உன் நாத்தனார் (இனிமேல் கூறலாமல்லவா) நர்மதையின் புருஷன் மீது பழி காட்டிய மனிதனும் அவனே: உன் குடும்பத்தையும் உன் மாமியின் குடும்பத்தையும் கலைத்த பாதகன் ஒரே ஆசாமிதான். அவனை நான் கைதியாக்கிச் சிறைச்சாலையிலேயே வைத்திருக்கிறேன். அந்தப் பாவி பார்ப்பதற்குப் பெரிய மனிதன்போல உத்யோகத்திலிருந்துகொண்டு உள்ளுக்குள் பல அக்ரமங்களைச் செய்து வந்திருக்கிறான். ஜெயில் வார்டர்களைக் கைவசமாக்கிக்கொண்டு சிறைக்குச் சென்றுவிட்டவர்களில் தனக்கு வேண்டியவர்களைத் தப்பி யோடியதாகப் பாவங் காட்டித் தப்பிக்கச் செய்திருக்கிறான். சில மந்திரக்காரர்களைக் கூட்டிக்கொண்டு அனேக பெண்களைப் பேய் ஓட்டுவதாகத் தருவித்து அவர்களை எல்லாம் கெடுத்து, மேல் அதிகாரிகளுக்குக் கூட்டிக்கொடுத்துப் பணஞ் சம்பாதித்தான்.

இந்த அக்ரமத்தை அவன் மனைவி கண்டித்ததற்காக அவளையும் விஷமிட்டுக் கொன்றுவிட்டான் அந்த தகவலை நாங்கள் ஏற்கெனவே கண்டுபிடித்தோம். சரியானபடி சாக்ஷி கிடைக்காமையினால் அதை மேற்கொண்டு நடத்த முடியாது விழித்தோம். அம்புஜத்திற்கும் அந்த விஷயம் தெரியுமானதால் அவனைப் பார்த்தவுடன்

அவன் மனைவியின் ஆவியே வந்ததாக நடித்தாள். அதன் மூலம் அவனை ஆராய்ந்து வெளியில் இழுக்க நினைத்தாள். இதற்குள் விவகாரம் பல பல மாதிரியாக ஆய்விட்டது. மேலே மேலே கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு இரவு பகலாக நானும் அம்புஜமும் இந்த விஷயமாக ஆராய்ச்சி செய்ததில் எல்லாம் ஒரே மனிதன்தான் என்பது வெட்ட வெளியாகிவிட்டது. அவனுக்கு உடந்தையாகவிருந்த மேல் அதிகாரிகளையும், இதில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் நேற்று அந்தந்த ஊர் போலீஸுக்குத் தந்தி கொடுத்து அரெஸ்ட்டு செய்தாயிற்று.

இன்னொரு சந்தோஷச் செய்தி. அதாவது இவன் செய்த அக்ரமங்களை எல்லாம் விசாரித்து உண்மை வெளியாகிவிட்டதால் நர்மதையின் புருஷனை விடுதலை செய்து விடுவதற்கு உத்திரவு கொடுத்துவிட்டதாக இதோ தந்தி கோர்ட்டிலிருந்து வந்திருக்கிறது. நாம் நாளை அங்கு சென்று அவரை யழைத்து வரவேண்டும். பதி பக்தியினால் நர்மதை தானும் பர்த்தாவுடன் சிறையிலிருக்கவேண்டும் என்ற காரணத்தினால் அவள் தன்மீது குற்றம் வருவதற்காக ஜட்ஜைச் சுடுவதுபோலப் பாசாங்கு செய்தாளே யல்லாது உண்மையில் அந்த எண்ணங் கிடையாது என்பதைப் பல ஆதாரங்களுடன் நிரூபித்துக் கவர்ன்மெண்டிற்கே நேரில் கடிதப் போக்கு வரத்து செய்து, அந்த விஷயத்தை ருஜூப்படுத்தினேன். நர்மதையின் பிராண,சிநேகிதையாகிய சந்திராவின் வீட்டிற்குச் சென்று அவர்களிடம் கலந்து பேசி நர்மதா எழுதிய கடிதங்களை வாங்கி அதையும் கவர்ன்மெண்டிற்கு அனுப்பிச் சரியான மனிதர்களைக்கொண்டு நிரூபித்தேன். கவர்ன்மெண்டும், ஜட்ஜியும் ஆழ்ந்து யோசித்துப் பதில் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் சீக்கிரத்தில் சந்தோஷகரமாகவே முடிந்துவிடும்.'' என்று நாயுடு தான் மறைந்தபடியே செய்த சகல காரியங்களையும் கூறினார்.

இந்த அத்யாச்சரியமான விஷயங்களைக் கேட்டு எல்லோரும் அபாரமான வியப்பும், திகைப்பும், கட்டு மீறிய சந்தோஷமும் அடைந்தார்கள். கோமளவல்லியம்மாளுக்கு மாத்திரம் இவ்விஷயங்

களை நாயுடு அப்போதைக்கப்போது தெரிவித்து வந்ததால் அந்த அம்மாளுக்குப் பின்னும் பதின் மடங்கு சந்தோஷமாயிற்று. அங் கச்சியம்மாளின் லீலா விநோதங்களை எல்லாம் நாயுடு திலகவதிக் கும், சுகுமாரனுக்கும் சொன்னார்.

திலகவதியின் கண்கள் நீரைக் கக்கின. "ஆ! பாவி என்னா லன்றோ அந்த அம்மாளுக்குத் துன்பம்! மாமா! குழந்தைகள் போய் விட்டனவா! ஐயோ! நான் அருமையாக வளர்த்து வந்தேனே! சோமுவா இறந்தான்! ஆகா! என்னென்ன வேடிக்கைகளெல்லாம் நடந்துவிட்டன!'' என்று வருந்தினாள். கணபதி அவளைத் தேற்றி "அம்மா! திலகம்! உன் தாயாரின்மீது நான் கொண்ட அன்பை இன்னமும் என்னால் மறக்கமுடியவில்லை. கிரமமாக நான் மணந் திருப்பின் நீயே என் சொந்தச் செல்வியாக விருப்பாய்! என் போதாக்காலம் அவ்வாறு செய்யாது தடுத்தது. உன்னை நான் என் சொந்த மகளாகப் பாவித்து வந்தும் என் கெடுமதியால் அன்று ஆத்திரப்பட்டுவிட்டேன். அதனால் தான் இத்தனை அனர்த்தங்கள் விளைந்தன.

என் செல்வீ! உன் பாட்டி எனக்குப் பத்தாயிரம் ரூபாய் ஆபத்திற்குக் கொடுத்து உதவியதை நான் மறக்கவில்லை. அந்த தொகையை முற்றிலும் நான் ஒரே சமயம் கொடுக்கச் சக்தியற்றவ னாகையினால் அந்த தொகைக்காக மாதம் இத்தனை ரூபாய் என்று நான் தனியாகப் பண்டில் அன்று முதல் கட்டிக்கொண்டு வருகி றேன். இந்த ரகஸ்யங்கள் அந்த அலகைக்குத் தெரிந்தால் பெருத்த ஆபத்தாக முடியும். அந்தப் பணத்தை இக்குழந் தைக்குக் கொடுக்கவிடாது பாதகம் செய்வாள் என்று எனக்குத் தெரியுமாதலால் அதையும் சொல்லாமல் வேதவல்லி விஷயத் தையும் கூறாது யாரோ அனாதை என்று மட்டும் கூறி இருந்தேன். நான் ஒன்று நினைக்க தெய்வச் செயல் ஒன்றாகிவிட்டது. இத்தகைய துஷ்டியைப் பெண்டாகக்கொண்டு நான் தத்தளித்தது போதும்; போதும்; பலதரம் நான் சன்யாசியாகி எங்கேனும் ஓடி விடவும் எண்ணியதுண்டு. அனாதைக் குழந்தையைக் கையேந்தி வாங்கி நான் வளர்ப்பதாகக் கூறிச் சத்தியம் செய்துவிட்டதை

எண்ணித் திலகத்தின் முகத்தைப் பார்த்து என்னுடைய நிர்மா னத்தை நிறுத்திக்கொண்டேன். இதற்கிடையில் கடவுள், சேற்றில் செந்தாமரை முளைத்ததுபோல அனர்கமான வஸ்துக்களாக குழந்தைகளைக் காட்டிவிட்டார். அவைகளை உத்தேசித்து நான் ஜீவித்து வந்தேன். அவைகளும் மோசமாகிவிட்டன. திலகவதிக்குத் துணையாக ஒன்று மிஞ்சியது. இந்நிமிடம் முதல் நான் சன்யாசி தான். அந்தப் பாவிக்காக நான் ஏதும் செய்யப் போவதில்லை. எனக்கு வெளியில் தலை காட்டமுடியவில்லை; மானம் போகிறது; ஆதலால் நான் என் சொத்துக்கள் முற்றும்—அந்தச் சண்டாளியால் நஷ்டமடைந்தது போக மிருதியையும், அந்த பண்டு ரூபாயையும் உங்களிடம் ஒப்புவித்துவிடுகிறேன். என் திலகவதியுடன் ஜெய லக்ஷ் மியையும் சேர்த்து உங்களிடமே தத்தம் செய்துவிட்டு நான் கண் காணுது கொஞ்ச காலம் இருந்து, என் துக்கத்தை ஆற்றிக்கொண்டு வருகிறேன். எனக்குத் தயவு செய்து யாரும் தடை கூறுதீர்கள்.

மாப்பிள்ளை! இந்த நிமிடமே, இதோ இந்த இடத்திலேயே என் திலகத்தை உமக்குக் கொடுத்துவிட்டேன்; நான் செல்கிறேன். திலகவதி! கண்மணி! என்னை க்ஷமித்து விடு; தடை செய்யாதே! ஜெயா! அக்காதான் உனக்குச் சகலமும்; ஜாக்ரதை. நாயுடு! இதோ என் பெட்டிச் சாவி: என்னுடைய சகல சொத்திற்கும் திலகவதியே உரிமை.'' என்று எழுதிய கடிதம் இதோ; நான் வருகிறேன்'' என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் கூறிவிட்டுச் சடக்கென்று போய் விட்டான். எத்தனை பேர் சொல்லியும் பயனில்லை. துக்கமும் அவமானமும் ஒன்றுகூடின் மனிதருக்கு வேறு எமன் வேண்டுமோ?

* * * * *

மறு தினமே நாயுடுகாருவுக்கு ஒரு தந்தி வந்தது. அது அவர் எதிர்பார்த்ததே யாகும். கவர்ன்மெண்டும், ஜட்ஜூம் யோசித்து நர் மதையை விடுதலை செய்துவிடும்படி உத்திரவு கொடுத்துவிட்டார்கள் என்ற சந்தோஷச் செய்தியே யாகும்: இதைக் கோமளவல்லி யம்மாள், சுகுமாரன் முதலியோர் கண்டு கட்டு மீறிய களிப்புகொண்டு அன்றே எல்லோரும் ஷண்முகபுரிக்குச் சென்றார்கள். மாதவன் திலகவதியின் இடுப்பை விட்டு இறங்காது ஒட்டிக்கொண்டான்.

தம்பதிக ளிருவரையும் ஓரே தினத்தில், ஏக காலத்தில் விடுதலை செய்து, அப்போதே மணமாகிய தம்பதிகள் போல அழைத்து வந்தார்கள். அச்சமயம் உண்டான ஆநந்தப் பெருக்கை அளவிட முடியவே முடியாது. கோமளவல்லியம்மாளின் தேகம் இரட்டிப்பாகப் பூரித்துப் போய்விட்டது. மாதவன் தன் தாயை ஒரு வயதில் பிரிந்தவனுகையினுல் நர்மதையிடம் போகவே மறுத்தான். திலகவதியையே தாயாகக் கொண்டான். திலகவதியும் நர்மதையும் கட்டித் தழுவினுர்கள். திலகவதியின் சரித்திரமெல்லாம் நர்மதை யறிந்து ஆச்சரியப்பட்டாள். சுகுமாரனை அன்போடு தடவினுள். தாயைக் கட்டித் தழுவினுள். புருஷன் பாதத்தில் விழுந்தாள். தங்களுக்கு விமோசனம் உண்டாக்கிய நாயுடுவுக்குத் தமது பூர்ண நன்றிவிச்வாசத்தைத் தெரிவித்து இருவரும் வணங்கினுர்கள். பிரிந்தவர் கூடினுல் பேசவுங்கூடுமோ என்பதுபோல எல்லோரும் தங்கள் பிரிந்த கால விஷயத்தை யுக யுகமாகப் பேசினும் போதமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

இதற்குமேல் நடக்கவேண்டிய தென்ன? சட்டப்படி சகல குற்றவாளிகளையும் தண்டித்தாய்விட்டது. இன்னும் மிஞ்சியுள்ள இரு குற்றவாளிகளுக்கு ஆயுள் பரியந்தமான தண்டனையை விதித்து அகற்ற முடியாத விலங்கைக் கடவுள் பூட்டிவிட்டார். அந்த குற்றவாளிகள யார்? சுகுமாரனும் திலகவதியுமே யாகும் என்பதைக் கூறவேண்டுமா? திருமணமென்ற நறுமண விலங்கைப் பூட்டி, இல்லறமென்னும் நல்ல சிறையில் அவர்களை அடைத்துவிட்டார். நாயுடுகாருவே பெண் வீட்டு மனுஷராக விருந்து இந்த விவாகத்தை வெகு சிறப்பாக நடத்தி வைத்தார்.

தெய்வீகமாக உதித்த காதல் விருக்ஷத்தில் கனிந்த கனியை அத் தம்பதிகள் அடைந்து பேராநந்தத்தை யனுபவிக்க லானுர்கள். மணியும் ஒலியும் போல, கனியும் இனிப்பும் போல, நகமும் சதையும் போல இவ்விருவரும் கோமளவல்லியம்மாளை ஆநந்தசாகரத்தில் தள்ளி அலையச் செய்துவிட்டார்கள். அச்சாகரத்தில் திளையும் கோமளவல்லியம்மாளுக்கு ஓர் ஆதாரம் கிடைத்ததுபோல அடுத்த வருடமே ஓர் பெண் குழந்தை மதியைப் பழிக்கும் முக தேஜஸுடன்

உதயமாகிவிட்டாள். கோமளவல்லியம்மாள் அந்த அதிரூப சுந்தர வடிவமுள்ள சிந்தாமணி உதயமான அன்றே மாதவனுக்குத் தகுந்த மாது இவள்தான்" என்று முடிபோட்டுவிட்டாள். அங்கச்சியம் மாளை சிறைச்சாலைக்குச் சென்று பார்க்க திலகவதி எத்தனை பிரயத் தனம் செய்தும், அங்கச்சி சம்மதிக்காது வெட்கி மறுத்துவிட்டாள்.

அம்புஜமும், திலகமும் அன்று முதலே அன்யோன்ய சிநேகி தைகளாகிவிட்டதால் திலகவதியும் அம்புஜத்தைப்போலத் தானும் பழகவேண்டுமென்று ஆசைகொண்டாள். இப்படி சில வருடங் களாயின.

* * * *

"அடாடா! என்ன ஆசை! என்ன அருமை! தான் பெற்ற குழந் தையைத் தானே குலாவுவது வெட்கமாக வில்லையா! நீங்கள் முத்த மிடும் ஓசை உள்ளே என் செவியைத் துளைத்ததே!" என்று கூறிக் கொண்டே திலவதி ஒருநாள் தன் காதலனின் அருகில் வந்து அமர்ந் தாள். நறுமணங் கமழ்ந்த பூஞ்சோலையில் ஓர் நித்திய மல்லிகைச் செடியின் கீழே அமர்ந்திருந்த சுகுமாரன் பின்னும் தன் ஆண் குழந்தையைப் பல முத்தங்களிட்டுப் பின்னர் "கண்மணீ! வெட்கமா நான் படவேண்டும்? சீச்சீ! சொர்க்கப் பதவி கிடைத்தவன்போல இப்போதே நமக்கு மகிழ்ச்சி உதயமாகி இருக்கையில் நான் இன்னும் இருளில் தவிப்பவன்போல மூடத்தனமாக விருப்பேனு! இந்த விலையிலா மாணிக்கத்தை எனக்கு அளித்த உனக்கு நான் என்னதான் கைம்மாறு செய்வேன்?'' என்றான்.

"சரி! சரி! கைம்மாறும் வேண்டாம்; கால்மாறும் வேண்டாம்; நான் வேடிக்கைக்காகச் சொன்னேன். நாதா! இந்த நிமிடம் நாம் அனுபவிக்கும் ஆநந்தகரமான நிலைமையில் நாம் இருப்போமென்று முன்னர் நினைத்தோமா! அப்பப்ப! நினைத்தாலும் தேகம் நடுங்கு கின்றது. பம்பாய் ஒட்டல் நினைவு, பம்பாய் சிறைச்சாலை நினைவு, பம்பாய் ஆஸ்பத்திரி நினைவு. இவைகளையெல்லாம் அடிக்கடி நான் எண்ணிப் பழங் கதைகளில் மூழ்குவேன். என் உபாத்தியாயினிகளை

யும், சிநேகிதைகளையும் மீண்டும் பார்க்க ஆவலாக விருக்கிறது. பம்பாயிக்குப் போகலாமா?" என்றாள்.

"கண்ணே! உனக்கு ஒரு செய்தி சொல்ல மறந்தேன். எனக்கு பம்பாயில் கலெக்டர் வேலை யாகும்போ லிருக்கிறது. இன்னும் இரண்டு தினத்தில் தகவல் தெரியும். உன்னிஷ்டப்படி பம்பாய்ச் சிநேகிதைகளுடன் குசாலாக விருக்கலாம். என் அன்பே! நாம் நமது சிந்தாமணி, ராஜு இவர்களைக் கவனிப்பது ஒரு பெரிதல்ல. ஜெயலக்ஷ்மியின் மனங் கலங்காமல் அவளை வளர்க்க வேண்டும். அவள் எங்கே? சிந்தாமணி, மாதவன் எங்கே? வீதியில் போய்விட்டார்களா என்ன? மோட்டார் எமனும், மாடுகளும் பெரிய உபத்திரவமாக விருக்கின்றன" என்று கூறிக்கொண்டே எழுந்து, குழந்தையைத் திலகவதியின் மடியில் தபார் என்று போட்டு விட்டு அங்கு கிளையில் பூத்திருந்த சில ரோஜாக்களைப் பறித்து அவள் தலையில் வைத்து, அன்பு ததும்பிய முத்தாரங்கள் சூட்டினான். பிறகு சிந்தாமணியையும் மாதவனையும் தேடிக்கொண்டு இருவரும் வீதியில் வந்தார்கள். சிந்தாமணியும் மாதவனும் வீதியில் வெகு அன்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் தாடி, மீசையுடன், ருத்திராக்ஷம் அணிந்த கிழவர் ஒருவர் வீதியில் விளையாடும் குழந்தைகளை வெகு ஆநந்தமாகப் பார்த்துக் களித்து ஆநந்தக் கண்ணீர் பெருக நின்றார். சுகுமாரனின் பிம்பம் பிரதி பிம்பிப்பதுபோல நிற்கும் சிந்தாமணியைப் பார்க்கும்போதே இது திலகவதியின் பெருஞ் செல்வம் என்று தெரிந்துகொண்டார். குழந்தையும் அவரைக் கவனித்தது அதே சமயம் இடுப்பில் ஓர் ஆண்மகனைத் தாங்கிக்கொண்டு திலகவதியும், அவளுடன் சுகுமாரனும் வீதியில் வந்தார்கள். இங்கு நிற்பவரைக் கணபதி என்று தெரிந்துகொண்ட தம்பதிகள் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அவரை வரவேற்று "என் தந்தைக்குச் சமதையாய் வளர்த்த பிதாவே! இதோ! இவ்விருவரும் தங்கள் பேரனும், பேத்தியும். அவன் தங்கள் பேத்தியின் கணவனாகப் போகிறவன். இதென்ன வேஷம்! அடையாளமே தெரியவில்லையே!" என்று ப்ரமித்தார்கள்.

கிழவர் இரு குழந்தைகளையும் வாங்கி மாறி மாறி முத்தமிட்டுத் தன் ஆநந்த பாஷ்பத்தை ஆறாகப் பெருகவிட்டார். இரண்டு

குழந்தைகளும் தாத்தாவின் தாடியைப் பிடித்து இழுத்து உருவிய வாறு "அடே! நமக்குத் தலையில் மாத்திரம் மயிரு. தாத்தாவுக்கு

வாயிலேகூட மயிருடா! மாதவா! வேடிக்கை! வேடிக்கை!" என்று கூறினார்கள். அதில் மாதவனும் கலந்துகொண்டான். இந்த நித்ய கல்யாண மங்கள வைபவம் போன்ற ஆநந்தத்தை விட தாதாவுக்கு வேறு சுகமும் போகமும் வேண்டுமா! தன்னையே மறந்து ஆநந்தக் கடலில் அகமகிழ்ந்தார். இதைக் கண்ட எல்லோரும் அம்ருதம் பருகியவர்கள்போல இன்பமயமாக நின்றார்கள்.

" பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.'' திருக்குறள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

" காதலின் கனி '' முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

210046
600 008

Published by V. M. Parthasarathy Iyengar,
for " JAGANMOHINI " OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

கொலை களவு தற்கொலை

மோட்டார் விபத்து

தன நஷ்டம் தேக கஷ்டம்

குடும்பப் பிரிவினை

மனக்கசப்பு மான நஷ்டம்

இத்தனை கஷ்டங்களுக்கும் மனிதனை ஆளாக்குவது

பாழுங் குடியே!

அத்தகைய குடியின் கேட்டைப்பற்றியும், ஏழைகளிடத்து அன்பு காட்டும்படி முருகப்பெருமானைப் பிரார்த்தித்தும், தாமே இயற்றிய பாடல்களை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் மனமுருகப் பாடியிருக்கிறார்கள்.

இந்த ரிகார்டை இன்னும் கேட்டிராவிடில்
இன்றே கேளுங்கள்.

G E 197	ஏழை முகம் பாரய்யா - ஹிந்து பைரவி போகுது பார் பணம் - நட பைரவி		விலை ரூ 2-12-0

மகாத்மா காந்தியின் தியாகத்தைப் பற்றியும், அவருடைய பிரார்த்தனைக் கீதமாகிய "வைஷ்ணவ ஜனதோ" வின் தமிழ் மொழி பெயர்ப்பையும் பாடியுள்ள மற்றொரு ரிகார்டு.

G E 205	சோல்லுவம் வைஷ்ணவன் - பியாக் சத்தியாக்ரகத்தியாகி - மாண்ட்		விலை ரூ. 2-12-0

ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்.,

மதராஸ்.

எல்லா "கோலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்

குளிர் காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலை வலி, காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி, கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல்வலி, ரணம், கக்குவாய் இருமல் முதலியவைகளுக்கும், இன்னும் பலவித நோய்களுக்கும்

ஒரு கை கண்ட ஔஷதம்

அமிர்தாஞ்சன் டிபோ

சென்னை கல்கத்தா பம்பாய்

சென்னை ராஜதானிக்கும், மைஸூருக்கும் தனி ஏஜண்டுகள்.

ஏ. பி. பாரெக்கு & கம்பெனி.

சைனு பஜார் ரோட், சென்னை.